பக்கங்கள் : பன்னிரண்டு

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 28 சனிக்கிழமை (12.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 227

# இலங்கை தன்னை ஏமாற்றுவதை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும்

## ஈழத்தமிழரே உண்மையான சகா என்பதை பாரதம் ஏற்கும் என்று நடேசன் நம்பிக்கை



கிளிநொச்சி, ஜூலை 12

"இந்தியாவை மீண்டும் மீண்டும் இலங்கை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது. இதனை புதுடில்லி சரியாகப் புரிந்துகொண்டு தனது உண்மையான சகா யார் என்பதை விரைவில் இனங்காண வேண்டும். அவ்வாறு உண்மையை உணர்ந்துகொள்ளும் தருணத்தில் ஈழத்தமிழர் பிரச்சினையை இந்தியா நிச்சயம் ஏற்றுக்கொள்ளும்."

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்.

இந்தியத் தலைநகர் புதுடில்லியிலிருந்து இயங்கும் 'ரைம்ஸ் நவ்' (Times Now) தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே நடேசன் இதனைக் குறிப்பிட்டார்.

"ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நளினி விடுவிக்கப்பட்டால், அதை இந்தியாவின் புதிய மாற்றத்துக்கான ஆரம்பமாகக் கருதமுடியுமா?" என்று கேட்பதற்கு பதிலளித்த பா.நடேசன் "ஆம். நான் அப்படித்தான் உணர்கிறேன்." - என்றார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நளினியை விடுதலை செய்யக்கூடாது; தமிழக அரசின் நிலைப்பாடு இதுவே!

### சென்னை உயர்நீதிமன்றத்துக்கு அறிவிப்பு

சென்னை, ஜூலை 12

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் ஆயுள்தண்டனை பெற்றுள்ள நளினியை விடுதலை செய்யக்கூடாது என்பதே தமிழக அரசின் நிலைப்பாடு என்று சென்னை உயர் நீதிமன்றில் நேற்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தம்மை விடுதலை செய்யக் கோரி கடந்த ஏப்ரல் மாதம் நளினி சென்னை உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல்செய்திருந்தார்.

வழக்கமாக ஆயுள்தண்டனைக் கைதிகள் 14 வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்படுவார்கள். நான் ஏற்கனவே 17 ஆண்டுகள் சிறைத்தண்டனையைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமம் நோக்கிச் சென்ற பஸ் மீது சூடு; சிறுமி உட்பட நால்வர் பலி! 25 பேர் காயம்

### கலகே காட்டுக்கு அருகே புத்தல வீதியில் சம்பவம்

மொனராகலை, ஜூலை 12

மொனறாகலையிலிருந்து புத்தல வழியாக கதிர்காமம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்று இனந்தெரியாத குழு ஒன்றின் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலுக்கு இலக்கானதில் 12 வயதுச் சிறுமி ஒருத்தியும் 2 பெண்களும் உட்பட நால்வர் உயிரிழந்தனர். 25 பேர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. கதிர்காமம் - புத்தல வீதியில் கலகே காட்டுக்கு சமீபமாக - 149 ஆவ்து மைல்கல் பகுதியில் இந்த பஸ்ஸை வழிமறித்த இனந்தெரியாத ஆயுதக் கும்பல் ஒன்று பஸ்ஸில் இருந்தவர்களைக் கண்மூடித்தன

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் குடும்பஸ்தர் கடத்தல்

மட்டக்களப்பு, ஜூலை 12

மட்டக்களப்பு, திராய்மடு கிராமப் பகுதியில் வைத்து வெள்ளை வானில் வந்தவர்களால் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார்.

பாரதி கிராமத்தைச் சேர்ந்த சுந்தரநாதன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### 40 மாணவர் யாழ்.ஆஸ்பத்திரியில் உள்ளகப் பயிற்சிக்குச் சம்மதம்

## மருத்துவபீட மாணவர்களின் பகிஷ்கரிப்பு நேற்றுமுதல் கைவிடப்பட்டதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்.மருத்துவபீட மாணவர்கள் தமது கற்றல் மற்றும் கல்விசார் கற்கை நெறிகளுக்கு நேற்று மீளத் திரும்பினர்இம் மாதம் நான்காம் திகதி தொடக்கம் மேற்கொண்ட பகிஷ்கரிப்பை கைவிட்டுள்ளனர்.

தற்போது இறுதியாண்டில் கல்விகற்கும் மருத்துவ மாணவர்களில் சுமார் 40 பேர் தமது சுய விருப்பின் பேரில் தமது உள்ளகப் பயிற்சி நெறியை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆற்றுவதென்ற ஆக்கபூர்வமான முடிவை எடுத்துள்ளார்கள்.

இது குறித்து யாழ்.மருத்துவபீட மாணவர் ஒன்றியம் நேற்றுப் பத்திரிகைகளுக்கு

(11 ஆம் பக்கம் பார்க்க)

### மேத்தை வியாபாரிகளின் கொலையின் எதிரொலி

## கல்முனைப் பொலிஸ் நிலைய அதிகாரி தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை!

மட்டக்களப்பு, ஜூலை 12

கல்முனையில் நேற்று முன்தினம்வெள்ளிக்கிழமை மூன்று சிங்கள மெத்தைவியாபாரிகள் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக-

கல்முனைப் பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் நேற்றுத் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

குருநாகல் திவுலுப்பிட்டியாவை சேர்ந்த டபிள்யூ.சி.விஜேயதிலக்க (வயது 52) என்பவரே மனமுடைந்து தற்கொலை செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்ட வியாபாரிகளின் மரணம் தொடர்பான விசாரணை அன்று இடம்பெற்றது.

இந்த மரண விசாரணைதொடர்பாக மரணமானவருக்கும் உயர் அதிகாரிகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டதாகவும்-

அதனைத் தொடர்ந்து அம்பாறை மாவட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப்படை வரவுமில்லை வருவதற்கு ஏற்பாடுமில்லை!

### சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார் சபை முதல்வர் நிமால்

கொழும்பு, ஜூலை 12

இலங்கையில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இங்கு வருகை தரும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் பாதுகாப்புக்காக இந்தியப் படையினர் 1,500 பேர் இலங்கை வந்துள்ளனர் என்று வெளியாகிய செய்திகளை இலங்கை அரசு மறுத்துள்ளது.

இவ்வாறு வெளியாகிய செய்திகளை ஆதாரங்காட்டி ஜே.வி.பி.யைச் சேர்ந்த ரட்ணாயக்க நேற்றும் புதன்கிழமையும் நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு நேற்றுப் பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் ஸ்ரீபால டி சில்வாவே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையிலும் திருப்பதியிலும் மகிந்த வழிபாடு

சென்னை ஜூலை 12

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சரித்திரப் பிரசித்தி பெற்ற திருமலை வெங்கடேஸ்வரர் ஆலயத்திற்கு நேற்றுச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்காவில் பெரும் தேடுதல்; 10 தமிழர் உட்பட 35 பேர் கைது

கொழும்பு, ஜூலை 12

கட்டுநாயக்காப் பகுதியில் நேற்றுக்காலை படையினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது 35 பேர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கட்டுநாயக்க உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமானவர்கள் எனக் கருதப்பட்ட பத்து தமிழர்கள் உட்பட 35 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்றுக்காலை வரை இத்தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் கூறினார்.

## தமிழ்க் குடும்பஸ்தர் முகத்துவாரத்தில் கொலை

கொழும்பு,ஜூலை.12

கொழும்பு,முகத்துவாரத்தில் போகிசன் வீதியிலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்தில் வைத்து இனந்தெரியாத நபர்கள் நேற்றுக்காலை 10 மணியளவில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தமிழர் ஒருவர் உயிரிழந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணங் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்து இருப்பேன் என உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

*ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி.*

(76227) **அடியாள்.**

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஜூலை11

இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

* கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானம்- அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
* சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானம் - யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் 'ஏ' அணி எதிர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.
* உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி மைதானம்-உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி எதிர் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி.
* மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானம் -மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
* யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானம் -யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி. (1-86)

# செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 12

'ஜெய்க்கா' செயற்திட்டத்தின் கீழ் யாழ். வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் செயலமர்வு ஒன்று நாளை காலை 9 மணிக்கு வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

## யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
## பரிசளிப்பு நாள் - 2008

| | |
|---|---|
| இடம் | : பஞ்சலிங்கம் கேட்போர்கூடம், கொக்குவில் இந்துக்கல்லூரி |
| காலம் | : இன்று (12.07.2008) சனிக்கிழமை காலை 9 மணி |
| தலைவர் | : திரு.அ.அகிலதாஸ் (அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி) |
| பிரதம விருந்தினர் | : திருமதி அ.வேதநாயகம் (பணிப்பாளர், யாழ்.கல்வி வலயம்) |
| சிறப்பு விருந்தினர் | : செல்வி ஞானலோஜினி சிவஞானம் (சட்டத்தரணி) |

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

## வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் வசிக்கக்கூடிய வீடு சகல வசதிகளுடனும் யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மித்த பகுதிகளில் தேவை.

தொடர்பு: 15, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 0774497982

## விற்பனைக்கு

புறொயிலர் சுத்தம் செய்தது 1 கிலோ 650/=. கல்பேட், ஊர்சேவல்கள், விறாத்துக் குஞ்சுகள் ஆகியன விற்பனைக்குண்டு.

**158/4, தாசன் பாம்,**
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



*யா/ உசன் இராமநாதன் ம.வி. ஆசிரியர் திருமதி சிவபாமா சிவகுமார் அவர்களின் பாசமிகு மாமியார்*

### திருமதி சிவபாதம் இராசம்மா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். (76237)

ஆசிரியர் நலன்புரி சங்கம், யா/உசன் இராமநாதன் ம.வி., மிருசுவில்.

## விற்பனைக்கு

**ORIENDAL AQUARIUAM**

வளர்ப்பு கலர் மீன்கள் மற்றும் மீன் தொட்டி உபகரணங்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: மல்ரிபாம், 61,இராமநாதன் வீதி, (நாச்சிமார் முன்றோட், யாழ்ப்பாணம்)

## Hatton National Bank

### அடகுப் பொருள்களை ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 30.04.2007 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுநகைகள் 19.07.2008 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

- உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியா விட்டால்....
- கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

- தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

(சி-553715) **-ஹற்றன் நஷனல் வங்கி.**

### தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் பதவியேற்பு

சாவகச்சேரி, ஜூலை 12

தென்மராட்சி கிழக்கு அரிமாக் கழகத்தின் 2008, 2009ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபை பதவியேற்புநிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக லயன்ஸ் கழக பிரதி ஆளுநர் லயன் லக்ஸ்மன் விஜயசிங்கவும் லயன்ஸ் சீமாட்டி டாக்டர் அனோமாவும் கலந்து கொள்வர். (1-231)




# மரண அறிவித்தல்கள்

## திருமதி மரியாம்பிள்ளை மேரிப்பிள்ளை(அன்னம்மா)



பண்டத்தரிப்பு, கேணிக்கட்டை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் ஹொலண்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியாம்பிள்ளை மேரிப்பிள்ளை (அன்னம்மா) ஹொலண்டில் 09.07.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னு, ஆசீர்வாதம், இரத்தினம், ஐயாத்துரை மற்றும் சின்னத்தம்பி, செல்லமணி, கிளி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயசீலன் (துரைசிங்கம் – ஹொலண்ட்), காலஞ்சென்ற செல்வராசா (சின்னத்துரை) மற்றும் மனோகரசீலன் (செல்வம்– சுவிஸ்), ஆரோக்கியநாதர் (பொன்ராசா– லண்டன்), அந்தோனிப்பிள்ளை (தங்கராசா– சில்லாலை), வினோத் (மாம்பழம்– சுவீடன்), றெஜீனா (சந்திரா– இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வசந்தி (நீர்கொழும்பு), புனிதம் (சுவிஸ்), இராணி (லண்டன்), நிர்மலா (சில்லாலை), உஷா (சுவீடன்), சற்குணம் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும் வதனி, ரஜனி, ராஜினி, ரமேஸ், யோன், டெனி, டயான், றெக்னோ, றெக்சன், றெஜி, தர்சிகா, தர்சன், வினிஸ்ரன், கனிஸ்ரன், வின்சன், அம்சானி, நிரோஜா, சனோஜா, தாவிது ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 14.07.2008 திங்கட்கிழமை ஹொலண்டில் நடைபெறும்.

அதேவேளை அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 14.07.2008 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சில்லாலை,*
*பண்டத்தரிப்பு.* (76241)

தகவல்:
அந்தோனிப்பிள்ளை
(தங்கராசா– மகன்).

## சின்னன் நல்லதம்பி



(மாவட்டச் செயலக ஊழியர்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னன் நல்லதம்பி 10.07.2008 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2008) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*300 வீட்டுக்குடியேற்றத்திட்டம்,*
*நாவற்குழி.* (76242)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

## சோமசுந்தரம் அருளானந்தம்



காரைநகர், ஆலடியைப் பிறப்பிடமாகவும் பொன்னாவளை, களபூமியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் அருளானந்தம் 10.07.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (ஆசிரியர்) - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் தசரதன், தவபாலன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வனஜா, சுபோதினி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் கஜரதனின் அன்புப் பேரனும் சுந்தரேஸ்வரி(வவுனியா), யோகலட்சுமி(ஆசிரியர், வவுனியா), விக்னேஸ்வரி(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், காரைநகர்), விவேகானந்தன்(இளைப்பாறிய உத்தியோகத்தர், கட்டடத்திணைக்களம்), பரமானந்தன் (பிரான்ஸ்), தேவீஸ்வரி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(13.07.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக களபூமி தில்லை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னாவளை,*
*களபூமி, காரைநகர்.* (76247)

தகவல்:
பிள்ளைகள்.

## முத்தையா பாலச்சந்திரன்(கப்பல் மாமா)

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாவும் மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா பாலச்சந்திரன் நேற்று (11.07.2008)வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் கோகுலன், ராகுலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகசோதி, அஜந்தா ஆகியோரின் மாமனும் லக்சிகாவின் பாசமிகு பேரனும் அமரர் அன்னபூபதி மற்றும் சொர்ணபூபதி, ஞானபூபதி, பூரணச்சந்திரன், தனபூபதி ஆகியோரின் சகோதரனும் கார்த்திகேசு, சரஸ்வதி, நடராசா, அமரர் கனகசபாபதி மற்றும் உமையம்மை, ராமநாதன், குமாரசாமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(13.07.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (76250)

தகவல்:
நல்லம்மா(மனைவி),
நாகசோதி(மருமகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பைக் கோருகின்றார் சுகாதார அதிகாரி

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்.மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம். சுகாதாரப் பழக்கங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் நோயிலிருந்து தம்மைப் பாதுகாக்க முயல வேண்டும்.

இவ்வாறு பொதுச் சுகாதார பரிசோதகர் இ.ஜெயதாசன் அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையினர் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சுகாதாரக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட அறிவுறுத்தலை விடுத்தார்.

தொடர்ந்து அவர் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் மலேரியாக் காய்ச்சலை இல்லாமல் செய்தது போன்று அபாயகரமான டெங்கு காய்ச்சலையும் இல்லாமல் செய்ய அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

டெங்கு நோய் ஒழிப்புக்கான மருந்துகள் இல்லாத போதிலும் மக்கள் சுகாதாரமாக வாழ்ந்தாலே டெங்கினை நிச்சயமாக அழிக்க முடியும். மழைக்காலங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாவதை தடுக்கும் முயற்சியினை அனைவரும் மேற்கொள்ள வேண்டும்.

டெங்கு காய்ச்சல் வைரஸ் நோய் என்பதால் இதனை முற்றாக அழிக்க மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. இரு வகையான வைரஸ்கள் மூலம் 4 வகையில் டெங்கு மனித உடல்களைத் தாக்குகின்றன. டெங்கு காய்ச்சல், டெங்கு குருதிப்பெருக்கு, டெங்கு அதிர்ச்சி, டெங்கு இழப்பு என நான்கு விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றில் கடைசி இரு தாக்கங்கள் ஏற்படுமாயின் நிச்சயம் மரணம் சம்பவிக்கும் அபாயம் உள்ளது.

டெங்கு நுளம்பு சுமார் 500 மீற்றர் பறக்கக் கூடிய வல்லமை உள்ளதால் அனைவரும் தமது இருப்பிடங்களை மட்டுமல்ல அனைத்து அயல் இடங்களையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

**நுளம்பு வரும் நேரங்கள்**

டெங்கு நுளம்புகள் காலை 6 மணி தொடக்கம் ஒன்பது மணி வரையும் பிற்பகல் மூன்று மணி தொடக்கம் மாலை ஆறு மணி வரையுமே நடமாடுவதால் அதன் தாக்குதல்களிலிருந்து எம்மைப் பாதுகாக்கும் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்படும் ஒருவருக்கு பூரண ஓய்வு அவசியமாகிறது. அத்துடன் வைத்தியரின் ஆலோசனை பெற வேண்டும். டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் அஸ்பிரின் மாத்திரை பாவிக்கக் கூடாது - என்றார். (202-207)

# சாவகச்சேரிச் சந்தையில் தேங்காயின் விலை குறைவு

யாழ்ப்பாணம், ஜூலை 12

சாவகச்சேரி பொதுச் சந்தையில் தேங்காயின் விலை ஓரளவு குறைவடைந்துள்ளது.

இங்கு தேங்காய்களை விற்பனை செய்து வரும் மொத்த வியாபாரிகள் அதன் அளவுகளுக்கேற்ப விலைகளை நிர்ணயித்து விற்பனை செய்து வருகின்றனர். இதன்படி தேங்காய் ஒன்று 25 ரூபா தொடக்கம் 45 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

# அனுமதிப்பத்திரம் பெறாத குளிர்பானம் அழிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை12

கொடிகாமம் பகுதியில் அப்பகுதி பொதுச் சுகாதார பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது முறையான சுட்டுத்துண்டு இடப்படாமலும் அனுமதிப்பத்திரம் பெறாமலும் 'கோப்-சிற்றி' விற்பனை நிலையத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 260 பைக்கற் குளிர்பானம் (ஜூஸ்) கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

# நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்த அலுவலர்கள் பழக்கப்பட வேண்டும்

## சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்து

குருநகர் ஜூலை 12

அலுவலகங்களில் சேவைபுரிபவர்கள் தற்போதைய நவீன உலகில் உருவாக்கப்படும் தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற அலுவலக ஊழியர்களின் மாதாந்தக் கலந்துரையாடலில் உரையாற்றியபோது யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் இந்த அறிவுறுத்தலை விடுத்தார்.

யாழ். பிராந்திய சுகாதாரசேவைப் பணிப்பாளர் அலுவலக ஊழியர்களின் இம் மாதத்துக்கான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய காலகட்டத்தில் அலுவலகங்களில் கணனிப் பாவனை புகுத்தப்பட்டுள்ளது. கணனி மூலம் கடிதங்கள், மற்றும் அவசிய படிவங்கள் வடிவமைக்கப்பட்டு வருகின்றது. தட்டச்சுப் பொறி மூலம் கடிதங்கள் தயாரிப்பது தற்போது குறைந்துள் ளது. எனவே அலுவலகத்தில் கடமை புரிபவர்கள் பழைய சாதனங்களைப் பயன் படுத்துவதை விரைவில் கைவிட வேண்டும். கணனி மூலம் இவைகளைத் தயாரிக்க தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக இங்கு கடமைபுரியும் ஊழியர்களுக்கு கணனிகள் மேலதிகமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (202-51)

# கட்டுப்பாட்டு விலையில் சிமெந்து விநியோகம்; மக்கள் காலையிலிருந்தே முண்டியடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்.ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையமொன்றில் கடந்த ஓரிரு தினங்களாகக் கட்டுப்பாட்டு விலையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சிமெந்து விற்பனை செய்யப்பட்டது.

சிமெந்தினைக் கொள்வனவு செய்வதற்காக காலையிலிருந்தே மக்கள் அந்த விற்பனை நிலையத்தின் முன்பாக முண்டியடிக்கின்றனர்.

நீண்ட நாள்கள் இடைவேளையின் பின் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கப்பல் மூலம் சிமெந்து யாழ்ப்பாண தனியார் வர்த்தகர் ஒருவருக்கு எடுத்து வரப்பட்டது.


அந்தச் சிமெந்து கடந்த புதன்கிழமை தொடக்கம் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

ஒரு பைக்கற் சிமெந்தின் கட்டுப்பாட்டு விலையான ஆயிரத்து 500 ரூபா விலையில் ஒருவருக்கு மூன்று பைக்கற் சிமெந்து விநியோகிக்கப்படுகின்றது.

கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்படும் சிமெந்தினைப் பெறுவதற்கு கடந்த மூன்று நாள்களும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

இதே வேளை-

குடாநாட்டுக்கு கப்பல் மூலம் மேலும் ஒரு தொகுதி சிமெந்து விரைவில் வந்து சேரும் என வர்த்தக வட்டாரங்களில் தெரிய




ஸ்ரான்லி வீதியில் உள்ள சிற்றி ஹாட்வெயர் ஸ்ரோரின் முன்பாக சிமெந்து கொள்வனவு செய்வதற்காக மக்கள் திரண்டு நிற்பதைப் படத்தில் காணலாம்.

(படம் : லக்ஸ்மன்)

# யாழ்.ப.நோ.கூ.சங்கப் பணியாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி ஜூலை முதல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வழங்கிவரும் வாழ்க்கைச் செலவுப்படியை 500 ரூபா அதிகரித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

தற்போது பணியாளர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் வாழ்க்கைச் செலவுப் படியான ஆயிரத்து 375 ரூபா இந்த ஜூலை மாதத்தில் இருந்து ஆயிரத்து 875 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, குடாநாட்டில் உள்ள அநேகமான ப.நோ.கூட்டுறவுச் சங்கங்கள் பணியாளர்களுக்கான மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படியை வழங்குவதற்கு பின்னடித்து வருவதாக பணிப்பாளர் தரப்பில் முறையிடப்படுகின்றது.

தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கேற்ப சங்கப் பணியாளர்களின் மாதாந்த படிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று சங்கப் பணியாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அனர்த்தம் மற்றும் அவசரகால சூழ்நிலையை எதிர்கொள்வதற்கான திட்டம் அமுலில்

## யாழ். மாவட்டத்தில் 'யுனிசெப்' முன்னெடுக்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 12

அனர்த்தம் மற்றும் அவசரகால சூழ்நிலையை எதிர்கொள்வதற்கான தயார் நிலையை யாழ். மாவட்டத்தில் முன்னெடுப்பதற்கான திட்டமொன்றை யுனிசெவ் நிறுவத்தினர் யாழ். மாவட்ட கல்விப்புலத்தில் மேற்கொண்டுள்ளனர்.

ஈ.பி.ஆர்.டி என அழைக்கப்படும் (EMERGENCY PREPARED NESS RES POND PLAN) இந்த திட்டத்தை செயற்படுத்துவதற்கான கருத்தரங்கும் செயற்பாட்டையும் கடந்த திங்கட்கிழமை தொடங்கி 3 நாள்கள் யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்றன.

யாழ் மேலதிக மாகாணக்கல்வி பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் மற்றும் யாழ். கல்விவலய பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகத்தினது வழிகாட்டலிலும் தலைமையிலும் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஐந்து வலயங்களையும் சேர்ந்த கோட்டக்கல்வியதிகாரிகள், ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், சமூகக்கல்வி பாட ஆசிரிய ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த திட்டம் விரைவில் பாடசாலை மட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-302)

# சமூகசேவைகள் உத்தியோகத்தர்களின் பணிகள் குறித்து அமைச்சர் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 12

இலங்கை சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்கள் வாரியாயாகத் தற்போது நாடளாவியரீதியில் மேற்கொள்கின்ற பணிகள் மற்றும் புதிதாக மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் சமூக சேவைகள் அமைச்சர் கலந்துரையாடியுள்ளார்.

சமூக சேவைகள் உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கடந்த வியாழக்கிழமை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சில் சந்தித்து தமது பணிகள் குறித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில் உத்தியோகத்தர்களின் ஊதியம் மற்றும் பதவிநிலை விடயங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப் பட்டு உரிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என்றும்-

இத் தீர்மானங்களை விரைவாக செயற்படுத்துவதற்கு உரிய அதிகாரிகளுக்கு அமைச்சர் உடனடியாக பணிப்புரைகளை விடுத்தார் என்றும்- அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

# தீவகப் பிரதேசங்களுக்கான மின் விநியோகம்; விஸ்தரிப்பு நடவடிக்கைகள் ஆரம்பம்

நல்லூர், ஜூலை 12

தீவகப் பிரதேசங்களுக்கான மின்விநியோகத்தை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அல்லைப்பிட்டிக்கு மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு யாழ்ப்பாணம்- குறிகாட்டுவான் - ஊர்காவற்றுறை வீதியில் அல்லைப்பிட்டிச் சந்தியில் இருந்து மின்கம்பங்கள் நடப்பட்டு மின்கம்பிகள் இணைக்கும் பணிகள் நடைபெற்றுள்ளன.

அதே சமயம் யாழ்ப்பாணம் -ஊர்காவற்றுறை நெடுஞ்சாலையோரங்களில் புதிய மின்கம்பங்கள் நடப்பட்டு மின் விநியோகக் கம்பிகள் போடப்படும் பணிகள் தற்போது இடம்பெறுகின்றன.

நெடுந்தீவுப் பகுதிக்கான மின் விநியோகச் சேவைகளை ஆரம்பிக்கும் பொருட்டு படையினரின் அனுசரணையுடன் மின் இணைப்பு உபகரணங்கள் கடந்த புதன் கிழமை எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-111)

### நாவற்குழி களஞ்சியத்திற்கு முன்னாலுள்ள மதகு புனரமைக்கப்படவுள்ளது

ஏ-9 பிரதான வீதியில் நாவற்குழி அரச களஞ்சியத்திற்கு முன்னால் உள்ள மதகை புனரமைக்கும் பணி ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான பிரதான வீதியின் அருகில் தற்காலிக வீதியொன்று அமைக்கப்பட்டு அவ்வீதியூடாகவே வாகனங்களின் போக்குவரத்து நடைபெற்று வருகின்றது.

இம்மதகு [illegible] பெருந்தெருக்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் புனரமைக்கப்படவுள்ளது.

# ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் 2 வருட கால ஆசிரிய பயிற்சியை மேற்கொள்வதற்கு தகமையுடைய ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரசாங்கப் பாடசாலைகளில் பணியாற்றும் பயிற்றப்படாத ஆசிரியர்கள், தனியார் பாடசாலைகளில் பணியாற்றும் மற்றும் மாகாணக் கல்விப்பணிப்பாளர் அனுமதி அளித்துள்ள நியமனங்களைக் கொண்டுள்ள ஆசிரியர்கள், பிரிவெனா ஆசிரியர்கள், தொலைக்கல்விப் பயிற்சி [illegible]கள் ஆகியோர் விண்ணப்பிக்கலாம்.

யாழ்.மாவட்டத்தில் பயிற்றப்படாத ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் "அதிபர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்" என்ற முகவரிக்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

சகல ஆசிரியர்களும் தமது பாடசாலை அதிபர்கள் ஊடாகவே விண்ணப்பிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 11.07.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் வெற்றியாளர்களுக்கு கொமர்ஷல் வங்கி 3 மில்லியன் ரூபாவுக்கு அதிக ரொக்கப்பரிசுகள்

2007 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தங்கள் பாடசாலைகளில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களில் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற கொமர்ஷல் வங்கி அருணலு கணக்கு வைத்திருக்கும் 353 திறமையான மாணவர்களுக்கு இந்நாட்டின் முன்னணி தனியார் வங்கியினால் ரொக்கப் பரிசுகள் வெகுமதியளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடசாலையிலும் முதலாவதாக வந்த மாணவர்களுக்கு ரூபா.10 ஆயிரம் இரண்டாவதாக வந்தவர்களுக்கு ரூபா 7 ஆயிரத்து 500 உம் மூன்றாவது இடத்துக்கு வந்த மாணவர்களுக்கு ரூபா. 5 ஆயிரமும் வங்கியினால் வழங்கப்பட்டன. 2007 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ரொக்க வெகுமதிகளின் மொத்தப் பெறுமதி 3 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்டதென்று வங்கி தெரிவித்துள்ளது. இந்த ரொக்க வெகுமதிகளுக்கு மேலதிகமாக, தத்தம் மாவட்டங்களில் இப்பரீட்சையில் மிகக்கூடுதலான புள்ளிகளைக்பெற்ற 353 மாணவர்களுக்குள் 4 மாணவர்கள் 2007இல் அறிமுகப்படுத்தப்பட்ட அருணலு, புதிய திட்டத்தின் கீழ் அவர்களின் கணக்கு மீதிகள் இரட்டிப்பாக்கப்பட்டது.

சிறு பராயத்திலிருந்தே கல்விப் புலமையை வளர்க்கும் அதே நேரத்தில் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கு 1998 ஆம் ஆண்டில் கொமர்ஷல் வங்கியினால் ஆரம்பிக்கப்பட்டது. பரிசுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட 2001 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் திறமையாக பெறுபேறுகளைப் பெற்ற 870 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு நாம் வெகுமதியளித்துள்ளோம் என்று கொமர்ஷல் வங்கியின் உதவி பொது முகாமையாளர் ரிச்சாட் ரொட்ரிகோ தெரிவித்தார். ஒரு சில அதிர்ஷ்டசாலிகளுக்கு மட்டும் வெகுமதி தரும் லொத்தர் திட்டங்களை நாடாமல் ஒவ்வொரு பாடசாலையிலும் முதல் மூன்று இடங்களுக்குள் வந்த ஒவ்வொரு அருணலு கணக்கு வைப்பாளருக்கும் நாம் வெகுமதியளித்துவந்துள்ளோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

'அருணலு' கணக்குகளை, கொமர்ஷல் வங்கியின் எந்தவொரு கிளையிலும் அல்லது சுப்பர் மார்கெட் கருமபீடங்களில் குறைந்தபட்ச வைப்பாக 100 ரூபாவைச் செலுத்தி ஆரம்பிக்க முடியும். பரீட்சை காலத்தில் பரிசுக்குத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச கணக்கு மீதமாக ரூபா.5 ஆயிரம் வைத்திருக்க வேண்டும்.

## சிறுவர் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க கொமர்ஷல் வங்கியின் 'அருணலு' கணக்கு

1969இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை கொமர்ஷல் வங்கி நாட்டின் முன்னணி தனியார்துறை வங்கியாகத் திகழ்வதுடன் 166 கிளைகள் மற்றும் 300இற்க்கு மேற்பட்ட ATM களைக் கொண்ட கணனி வலையமைப்பினை கொண்டுள்ளது. அத்துடன் பங்களாதேஷில் 9 பூரணத்துவமான கிளைகளை வைத்திருக்கிறது. உலகின் மிகவும் பிரசித்தி வாய்ந்த நிதி வெளியீடுகளில் ஒன்றான அமெரிக்காவின் குளோ பல் பினான்ஸ் சஞ்சிகையினால் "இலங்கையில் மிகச் சிறந்த வங்கி" என தொடர்ந்து 10 ஆண்டுகளாக தரச் சிறப்பு பெற்றுள்ளது. அத்துடன் ஒரு பிரபல உலக வங்கியியல் சஞ்சிகையான "தபாங்கர்" ஆறு ஆண்டுகளாக இலங்கையில் "ஆண்டின் மிகச் சிறந்த வங்கி" என்ற தரச் சிறப்பினை வழங்கியிருக்கிறது. 2007 ஜூலையில் "யூரோ மணி" என்ற பிரபலம் வாய்ந்த சர்வதேச நிதி சஞ்சிகையினால் "இலங்கையில் மிகச் சிறந்த வங்கி" என்ற தரச் சிறப்பினை இவ் வங்கி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மாவலிதுறைமுகம் புனரமைக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 12

நெடுந்தீவு மாவலி துறைமுகப் பகுதியை ஆழமாக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

துறைமுகக் கடற்பகுதியில் கிடைக்கும் பெரிய கற்களால் படகுகள் அடிக்கடி சேதமடைந்து வந்தன. அத்துடன் வற்றுக் காலங்களிலும் படகுகளைத் துறைமுகத்திற்குள் கொண்டு செல்வதில் சிரமங்களை படகோட்டிகள் எதிர்கொண்டனர்.

இதனைக் கருத்தில் கொண்டு கடலுக்குள் கிடைக்கும் கற்களை உடைத்து துறைமுகப் பகுதியை ஆழமாக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவுக் கடற்படையினரின் ஏற்பாட்டில் இப்பணிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(202-111)

## மாகாணமட்ட ஆங்கில தினப் போட்டிகளில் சில யாழ்ப்பாணத்திலும்

### எழுத்துப் போட்டி நாளை

வலி.வடக்கு, ஜூலை 12

யாழ்.மாவட்ட பாடசாலைகளிடையே இடம்பெற்ற ஆங்கில தினப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான மாகாண மட்டப் போட்டிகளில் சில யாழ்.மாவட்டத்தில் நடத்தப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட மாணவர்கள் வவுனியா சென்று குறிப்பிட்ட போட்டிகளில் கலந்து கொள்வதில் காணப்பட்ட போக்குவரத்து கஷ்டம் மற்றும் பாதுகாப்பு, தங்குமிட வசதிகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை தரம் 3இல் இருந்து தரம் 13 வரையான மாணவர்களுக்கான எழுத்துப் போட்டிகள் காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளன.

மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்பவர்களை உரிய நேரத்திற்கு போட்டி மண்டபத்திற்கு சமூகம் தரும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (202-86)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை**
**விஞ்ஞான பீடம்**

**முக்கிய அறிவித்தல்**

விஞ்ஞான இளமாணிப்பட்டப்படிப்பிற்கு 2005/2006, 2006/2007 ஆம் கல்வியாண்டுகளில் அனுமதி பெற்ற மாணவர்களுக்கான நிலை (Level 2G) கற்றற் செயற்பாடுகளும், 2004/2005 ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிலை 3 (Level 3G) கற்றற் செயற்பாடுகளும் முன்னர் அறிவிக்கப்பட்டது போல் 2008 ஜூலை 21ஆம் திகதி ஆரம்பமாகமாட்டாது. கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகும் புதிய திகதி பத்திரிகைகள் வாயிலாக பின்னர் அறிவிக்கப்படும்.

11.07.2008 **பதிவாளர்.**

## ஜீ.சீ.ஈ மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை12

ஜீ.சீ.ஈ உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு வடமராட்சி வலயத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் திங்கள் தொடக்கம் 3 தினங்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

நெல்லியடி மத்திய மகாவித்தியா லயத்தில் நடைபெறவுள்ள இக்கருத் தரங்கில் இணைந்த கணிதம், உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களுக்கான வழிகாட்டல்ஆலோசனைகள் வழங்கப் படவுள்ளன.

(202)

## சண்டிலிப்பாய் இந்துவில் 'சிசு உதான' அலகு

யாழ்ப்பாணம், ஜூலை 12

மக்கள் வங்கியின் 47 ஆவது ஆண்டு நிறைவையொட்டி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் 'சிசு உதான அலகு உருவாக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கி சங்கானைக் கிளையின் முகாமையாளர் ந.துரைராசா அலகை கடந்த வியாழக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். (202-29)

## சமய சந்நிதிகளில்

குருநகர், ஜூலை12

குருநகர் கார்மேல் அன்னை ஆலயத் திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஆராதனைகள் தினமும் பிற்பகல் 4.00 மணிக்கு திருச்செபமாலை மற்றும் திருப்பலியுடன் நடைபெற்று வருகின்றன.

நற்கருணைநாதர் விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை 4.15 மணிக்கு நடைபெறும். மறுநாள் புதன்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், மாலை 3.30 மணிக்கு அன்னையின் திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளன.

* * *


யாழ்ப்பாணம் ஜூலை12

சாவகச்சேரி நுணாவில் விளைவேலி மருதடி வீரகத்திவிநாயகர் ஆலயமகாகும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை மு.ப.10.20 மணிக்கு நடை பெற வுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் கிரியை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை [illegible] மணி தொடக்கம் மாலை [illegible] மணிவரை நடைபெறவுள்ளது. (202-231)

## 35ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

இகத்தில் 12 . 05 . 1946



பரத்தில் 08 . 06 . 2008

### அமரர் மார்க்கண்டு நல்லையா (செல்வராசா)

(முன்னாள் கிளை முகாமையாளர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

பண்பாடு பேணும் பண்பாளர் வாழும் - நம் ஊரில்
பண்பாடு இன்றியே- படு பாதகம் செய்தனர்
சிந்திக்கும் கனம் தோறும் சிந்தை அது கலங்குதே
ஆற்றாத கொடுநோயால் அவதியுறு காலையில் -உன்
மனையாளோடு உற்றாரும் அழுது விட்ட கண்ணீருக்கு
நிச்சயம் ஒரு விலை உண்டு பெறுக நின் ஆத்ம சாந்தி.
ஓம் சாந்தி!

இன்று (12.07.2008) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதிய போசனநிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"ஸ்ரீசோதி வாசம்" பாற்சங்க ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில். (சி/553718) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு அப்பாத்துரை (அப்பா அண்ணை)



*(விநாயகா லொறி உரிமையாளர்)*

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் தம்பாலை, அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு அப்பாத்துரை அவர்கள் இந்தியாவில் 08.07.2008 செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய். தகவல்: மகன் - அ.செந்தூரன். (76228)

### இரத்தினசிங்கம் கனகமணி

**(மண்டைதீவு)**

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் திருவையாறு, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் கனகமணி 09.07.2008 புதன்கிழமை கிளிநொச்சியில் காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும், சரவணபவானந்தன் (பிரபல வர்த்தகர்), சந்தானலெட்சுமி, வசந்தமலர், பொன்னம்பலநாதன், சிறிதேவி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.07.2008 வியாழக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் கட்டை,
கட்டப்பிராய். (76230) தகவல்: மகள் - வசந்தமலர்.

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



அமரர்
செபஸ்ரியன்
வோல்ற்றர் இருதயராஜன்

மலர்வு: 09.04.1960

உதிர்வு: 12.07.2006

ஈராண்டு சென்றாலும் - எம்
இதயமதில் வீற்றிருக்கும்
எம் குலஒளி விளக்கே
அன்பின் திருவுருவே
எம் வாழ்வின் ஒரு நொடியும்
உம்மை மறக்க முடியாமல்
உம் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.


No.48,
MARTIN ROAD, JAFFNA. எங்கள் நினைவுகள்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்....





யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியின் இடைநிலைப் பிரிவு மாணவர்கள் உதயன் அலுவலகத்திற்கு கல்விச்சுற்றுலா மேற்கொண்டபோது எடுக்கப் பட்ட படம் இது.



பசுமைப் புரட்சியாளர் வை. செகராஜசிங்கம் அண்மையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்தார்.

மேலதிக மாவட்ட நீதிவான் இரா.வசந்தசேனன் பதவிப் பிரமாணம் செய்து வைப்பதைப் படத்தில் காணலாம்.



வல்வெட்டித்துறை றோ.க.த.க. பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஆ. முத்தையாவிற்கு அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர் இராஜேஸ்வரன் ஓய்வுபெற்ற அதிபருக்கு நினைவுப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் நா. கண்ணதாசனும் காணப்படுகின்றார்.



சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற திருநாவுக்கரசர் குரு பூசையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் திருநாவுக்கரசரின் உருவப் படத்தை ஊர்வலமாக எடுத்து வருவதைப் படத்தில் காணலாம்.



நல்லை ஞானசம்பந்தர் பாலர் பாடசாலையின் விளையாட்டு விழாவில் மாணவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.



சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தின நிகழ்வில் எடுக்கப்பட்ட படம்

சங்கத்தின் மூத்த உறுப்பினர்களான திருமதி நல்லம்மா கணேஸ், செல்வி வைரமுத்து இரவீந்திரராணி ஆகியோரை சாவகச்சேரி மகளிர் கல்லூரி உப அதிபர் திருமதி ருக்மணி இராசரத்தினம் மலர்மாலை, அணிவித்து கௌரவிப்பதையும் அருகில் சங்கத் தலைவி திருமதி லோகேஸ்வரி நவரத்தினம் நிற்பதையும் காணலாம். (207)



ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட படம்.

விழாவின் விருந்தினர்களான யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன், அவரது பாரியார் கௌரி சண்முகலிங்கன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன், பாடசாலை அதிபர் செ. சிவநடராசா ஆகியோர் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.



ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தில் இலங்கை மற்றும் உலகப் படத்தை வரைந்த ஓவியர் முருகேசு திருஞானரத்தினம் பாடசாலைச் சமூகத்தால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. தமிழ்மாறன் ஓவியருக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

முதலாவது பிறந்தநாள் வாழ்த்துகள்

நந்தகுமார்- பத்மராணி
தம்பதியரின் செல்வப்புதல்வி
வர்ஷாஜினி இன்று (12.07.2008)
சனிக்கிழமை தனது முதலாவது
பிறந்தநாளை தனது
இல்லத்தில் வெகு விமரிசையாகக்
கொண்டாடுகின்றார். செல்வியை அன்பு
அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, ரஞ்சி
அத்தை, லிங்கம் மாமா, ராசன் மாமா, மாமி,
ஜேர்மனியில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா,
மாமிமார், மாமாமார், அண்ணாமார்,
மச்சான்மார், மச்சாள்மார் அனைவரும்
பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க
என வாழ்த்துகிறார்கள்.

லிங்கம் களஞ்சியத்தினர்,
அப்பா- நந்தகுமார்
(யாழ்.போதனா வைத்தியசாலை).
கொட்டடி, யாழ்ப்பாணம்.

வர்ஷாஜினி

12.07.2008

(76114)


# கட்டுரைப் போட்டி முடிவுகள்

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர சபையினரால் மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளின் முடி வுகள் வெளியிடப்பட்டுள்ளன.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வில் வழங்கப்படுமென நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித்தார்.

மத்தியபிரிவு

ஜெயசுதன் கம்சனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), ஸ்ரீ.கிரிடி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நா.கோதன்யா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

மேற்பிரிவு

இ.இராஜப்பிரிவிந்தன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கி.நிசாந்தி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கி.தேனுகா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

அதிமேற்பிரிவு

சிவசோதி சிவவதனி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), குணசேகரம் நித்தியா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), ஜெயகணேசன் ஜெயதர்சினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) (202-207)


COMPUTER EXPRESS
Institute of Information Technology
167, Kasthuriyar Rd, Jaffna 0777222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

Diploma in Video Editing
முன்னணி Video Mixing Software களுடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

Diploma in Graphic Designing
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

பிரபல கணணிக்கணக்கியல் மென்பொருள்.........
Tally செய்முறைப்பயிற்சிகளுடன் கம்பனிகணக்குகளையும் உள்ளடக்கி..

வகுப்புக்கள் ஆரம்பம் :14/07/2008 09.00AM



இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
பெருந்தெருக்கள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## கூறுவிலை கோரல்கள்

யாழ்.மாவட்டத்திலுள்ள கிராமிய வீதிகளை மகா நெகும திட்டத்தின் கீழ் புனர்நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல்கள்
பெருந்தெருக்கள் அமைச்சின் நிதி வழங்கல்கள்
உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

01. பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA), யாழ்ப்பாணம், மகா நெகும திட்டத்தின் கீழ் பின்வரும் கிராமிய வீதிகளின் புனர்நிர்மாண வேலைக்கான மூடிய கேள்விப்பத்திரங்களை பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் கேள்விச் சபையின் சார்பாக பெற்றுக்கொள்வார். கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் நடைமுறை 21.07.2008 அன்று பிற்பகல் 2 மணியுடன் முடிவடையும். கேள்விப் பத்திரங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் யாழ்ப்பாண காரியாலயத்தில் கிடைக்கும் கேள்விப்பத்திரப் படிவங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்பத்திர ஆவணங்கள் 12.07.2008 தொடக்கம் 21.07.2008 வரை மீளளிக்க முடியாத கேள்விப்பத்திர கட்டணமான ரூபா 750.00 (பெறுமதிசேர் வரி உள்ளடங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

I. மாதகல், சென்.செபஸ்தியான் வீதி புனரமைப்புச் செய்தல் -1 கி.மீ. (நிர்மாண காலம் 2மாதம்)

| தரம் | பாதுகாப்புக் கட்டணத்தொகை |
|---|---|
| M8 | 20,852.00 |

II. நயினாதீவு- நெடுங்கேணி வீதி புனரமைப்புச் செய்தல் -0-700மீ. (நிர்மாண காலம் 2மாதம்)

| தரம் | பாதுகாப்புக் கட்டணத்தொகை |
|---|---|
| M7 | 26,440.00 |

III. கல்வயல் துரையம்மன் கோயில் வீதி புனரமைப்புச் செய்தல் -0-710மீ. (நிர்மாண காலம் 2மாதம்)

| தரம் | பாதுகாப்புக் கட்டணத்தொகை |
|---|---|
| M8 | 20,938.00 |

IV. உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி புனரமைப்புச் செய்தல்1.60-2.60மீ. (நிர்மாண காலம் 2மாதம்)

| தரம் | பாதுகாப்புக் கட்டணத்தொகை |
|---|---|
| M8 | 22,240.00 |

02. நிறைவேற்றும் நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையாகும்.

03. தகுதிவாய்ந்த கூறுவிலை கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களிற்கு இணங்குதல் வேண்டும்.
   1. கேள்விகோரல் கோருபவர் மேற்கூறப்பட்ட I,III,IV வேலைகளுக்கு தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி/பால நிர்மாணத்துறையில் தரம் M8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
   2. கேள்வி கோரப்படுபவர் மேற்கூறப்பட்ட IIஆம் இலக்க வேலைக்கு தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி/ பால நிர்மாணத்துறையில் தரம் M7அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

04. கேள்விப்பத்திர ஆவணங்களை எதுவித கட்டணமுமின்றி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர், கடற்கரை வீதி யாழ்ப்பாண காரியாலயத்தில் பார்வையிடலாம்.

05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவுறும் திகதியிலிருந்து 60 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாகும்.

06. கேள்விப் பாதுகாப்புக் கட்டணத்தொகையான மேற்குறிப்பிட்டுள்ள பெறுமதிக்குரிய பத்திரங்கள் கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். செல்லுபடியாகக்கூடிய பாதுகாப்புப் பணப்பத்திரங்களை கொண்டிராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07. முன்கேள்வி கோரல் கூட்டம் 19.07.2008 அன்று முற்பகல் 10.00 மணிக்கு பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இல.761, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.

08. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்களின் இருபிரதிகள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இல.761, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் பதிவுத் தபாலிலோ, அல்லதுநேரடியாகவோ முடிவுறும் நேரத்திற்கு முன்பாக சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

09. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திர ஆவணங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இல.761, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும். கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்த நேரத்தில் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

10. மேலதிக விவரங்களிற்கு தயவுசெய்து பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021-222 2968, தொலைநகல் இலக்கம் 021-222-2517, மின்னஞ்சல் முகவரி cejaffn@rda.gov.lk என்பனவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

எந்திரி வி.சுதாகர்,
பிரதம பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.
(அ/553691)


# விபத்தில் யுவதி காயம்

யாழ்ப்பாணம், ஜூலை12

மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் நேருக்குநேர் மோதிக்கொண்டதில் யுவதி ஒருவர் காயமடைந்தார்.

வீதியில் நின்ற வாகனத்தை சைக்கிள் முந் திச் செல்ல முற்பட்ட வேளையில் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை காலை வரணி, இயற்றாலையில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் நிர்மலா (வயது 16) என்பவர் வலது காலில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டார்.

(202-207)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 . 07 . 1923



உதிர்வு 12 . 07 . 2006

LATE REV.SR.M.ANTONINA.Ac

ஆண்டுகள் இரண்டு அல்ல பலவாகினும்
ஆறிடுமோ அன்புசால் உற்றார் உள்ளம்
ஆயிரத்தில் ஒருத்தி என படைத்த பல சாதனைகள்
ஆற அமர்ந்து எண்ணியே கலங்குகின்றோம்.

(76210)

குடும்பத்தினர்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி பாலையா சிவபாக்கியம்
(சித்திரா)

தோற்றம் 12.12.1960

மறைவு 16.07.2005

அன்பின் உறைவிடமாய் பண்பின் பணிவிடமாய்
பாசத்தின் சிகரமாய் இருந்து எம்மை வளர்த்த
அன்னையே எம்மை விட்டுப் பிரிந்து சென்றதேனோ?
முத்தான மூன்று கண்மணிகளை விட்டுச் சென்று
மூன்று ஆண்டுகள் ஆனதோ அம்மா எங்கள்
உயிர் இருக்கும் வரை உங்கள் நினைவோடு
வாழ்ந்திடுவோம் மீண்டும் இவ்வுலகில் எமது
அன்னையாய் வந்து உதித்திட இறைவனை வேண்டுகின்றோம்.

செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர்.

கணவர்,
பிள்ளைகள்.

(76216)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் தபாலகத்திற்கு கட்டடம் அமைக்க ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை நிதி உதவி

யாழ்ப்பாணம்,ஜூலை12

சுன்னாகம் தபாலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கென ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை 25 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாகச் சுன்னாகம் தபாலகம் தனியார் கட்டடம் ஒன்றிலேயே இயங்கி வருகின்றது. எனவே இத்தபாலகத்திற்கென நிரந்தரக் கட்டடம் அமைக்கும் முயற்சியில் பிரதேச மக்களும் வர்த்தகர்களும் சுன்னாகம் நகர அபிவிருத்தி மன்றத்துடன் இணைந்து ஈடுபட்டுள்ளனர்.

இந்நடவடிக்கைக்கு ஊக்கமளிக்கும் வகையில்ஹற்றன் நஷனல் வங்கி நிதியுதவி வழங்கியுள்ளது எனக் கிளை முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் தெரிவித்தார்.

கிளையின் 5ஆவது அகவைப் பூர்த்தியை முன்னிட்டு இந்த நிதி வழங்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த உதவித்தொகைக்கான காசோலை வழங்கும் நிகழ்வு அண்மையில கிளைமுகாமையாளர் தலைமையில் நடைபெற்றது.

வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர் (வலயம் I) திருமதி கிருஷாந்தி தம்பையா சுன்னாகம் நகர அபிவிருத்தி மன்றப் பிரதிநிதிகளிடம் காசோலையைக் கையளித்தார்.

நிகழ்வில் வங்கியின் வடகிழக்குப் பிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் ஏ.வி.பீடில், யாழ்.மேற்றரக் கிளை சிரேஷ்ட முகாமையாளர் ரி.ஜெயராஜசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (202)



காசோலைக் கையளிப்பின்போது...

# புலிகளின் கொலைப்பட்டியலில் மஹிந்தா; தாம் அப்படிக் கூறவில்லை என்கிறார் சிவாஜி

## அரச மற்றும் சிங்கள ஊடகங்கள் மீது சீற்றம்

கொழும்பு, ஜூலை12

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெயர் புலிகளின் கொலைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சிவாஜிலிங்கம் ஆஸ்திரேலியாவில் வைத்துத் தெரிவித்தார் என்று அரசாங்கமும் மற்றும் சிங்கள ஊடகங்களும் பொய்யான செய்தியை வெளியிட்டுள்ளன என்று நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டினார்.

தாம் ஒருபோதும் அவ்வாறு கூறவில்லை என்றும் ஊடகங்களின் இவ்வாறான செய்தி மூலம் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சீற்றத்துடன் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் சிவாஜிலிங்கம் சிறப்புரிமை மீறல் பிரச்சினை ஒன்றைக் கிளப்பி இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

புலிகளின் கொலைப் பட்டியலில் மஹிந்த ராஜபக்ஷவின் பெயர் உள்ளதாக நான் அவுஸ்திரேலியாவில் வைத்து ஊடகங்களுக்குத் தெரிவித்தேன் என்று சில இலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. நான் ஒருபோதும் அவ்வாறு கூறவில்லை.

ஜனாதிபதியோ பொதுமக்ளோ கொல்லப்படுவதை நான் விரும்பவில்லை. அதை நான் ஏற்கவும் மாட்டேன்.

இந்த யுத்தம் நிறுத்தப்பட்டு பேச்சுமூலம் தீர்வு காணப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் உள்ளேன்.

யுத்தம் நிறுத்தப்பட்டுத் தீர்வு முன்வைக்கப்படும்போதுதான் அரச படையினரும் புலி உறுப்பினர்களும் கொல்லப்படுவது நிறுத்தப்படும்; மக்களும் நிம்மதியாக வாழ்வர்.

இதனை விட்டுவிட்டு என்னைப்பற்றிப் பொய்யான கருத்துகளைப் பரப்ப வேண்டாம். இதன் மூலம் எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. நான் எந்தவிதமான கொலை மிரட்டல்களுக்கும் அடிபணியவும் மாட்டேன். - என்றார். (அ-சி)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை12

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பரிசளிப்பு விழா எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.ஆயர் அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக பிரயோக விஞ்ஞான பீடாபதி டாக்டர் ஜே. சி.நிகால் ராஜேந்திரா கலந்துகொள்கிறார்.

* * *

கோப்பாய்,ஜூலை12

காளிகோயிலடி ஐக்கிய இந்து சனசமூக நிலையத்தின் கட்டடத் திறப்பு விழாவும் கலை நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நிலையத் தலைவர் வி.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி காந்தநேசன் கலந்து சிறப்பிப்பார். (202-72)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை12

யாழ்.கல்வி வலயத்தின் முறைசாரா கல்விப் பிரிவினர் கோப்பாய் கோட்டத்தில் உள்ள ப்டசாலையை விட்டு விலகிய இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வழிகாட்டல் கருத்தரங்கொன்றை ஒழுங்கு செய்துள்ளனர்.

யாழ்.கல்வி வலயத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கருத்தரங்கு நடைபெறவுள்ளதாக முறைசாராக் கல்வி உதவிப் பணிப்பாளர் மு.இராசரெத்தினம் தெரிவித்தார்.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த வள ஆளணியினர் வழிகாட்டல் பயிற்சிகளை வழங்கவுள்ளனர். (202-302)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை12

யாழ்ப்பாணம், கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் இயங்கும் ஸ்ரீ கல்கி ஆன்மீக மையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அபிசேகமும் பூசையும் இடம்பெறும். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை12

தென்மராட்சிப் பிரதேச கலாசாரப் பேரவையின் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

பிரதேசத்தில் இலக்கியம், நாடகம், இசை, நடனம், புதைபொருள், அரும்பொருள், ஓலைச்சுவடி ஆகிய துறைகளில் அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்களைக் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலரும் பிரதேச கலாசாரப் பேரவைத் தலைவருமான செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (202-207)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை12

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவின் பின்னர் முதலாவது புதிய பொதுச்சபை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கூடுகின்றது எனச் சங்கத்தின் செயலாளர் சி.தேவகுமார் தெரிவித்தார்.

இந்த முதலாவது பொதுச்சபைக் கூட்டத்தில் புதிய இயக்குநர் சபைத் தெரிவும் இடம்பெறும்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கமும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார். (202-224)

# எண்ணெய் உற்பத்தி நாடுகளுடன் 2010இல் இலங்கையும் இணையும்

## அமைச்சர் பௌஸி நம்பிக்கை

கொழும்பு,ஜூலை12

''உலகில் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளுடன் 2010ஆம் ஆண்டில் இலங்கையும் இணைந்துகொள்ளும்'' - எனப் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எண்ணெய் அகழ்வு மேற்கொள்வது தொடர்பாக இலங்கை அரசுக்கும் இந்தியாவின் கெயர்ன் நிறுவனத்துக்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு, 'கிளமன்கிராண்ட்' ஹோட்டலில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் பௌஸி இதனைத் தெரிவித்தார்.

''இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் மூலம் எமது நாட்டுக்குப் பெருமளவு நன்மைகளும், பொருளாதார முன்னேற்றத்துக்கான உந்து சக்தியும் கிடைக்கும்'' - என்றும் அமைச்சர் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

''எண்ணெய் மற்றும் இயற்கை வாயு அகழ்வாராய்ச்சிப் பணிகள் அடுத்த 6 மாத காலத்துக்குள் ஆரம்பிக்கப்பட்டுவிடும். 2010ஆம் ஆண்டளவில் முதலாவது எண்ணெய் பரல் இலங்கைக்குக் கிடைத்துவிடும். நாளொன்றிற்கு 80 ஆயிரம் பரல்கள் எண்ணெய் உற்பத்தி செய்யமுடியுமென நாம் எதிர்பார்க்கின்றாம். இதன் மூலம் பெருமளவு அந்நியச் செலாவணியை மீதப்படுத்த முடியுமாக இருக்கும்.

எண்ணெய் அகழ்வுக்காக இந்திய நிறுவனத்துக்கு அரசு அனுமதி வழங்கியமை குறித்து சிலர் தவறான கருத்துகளைக் கூறியுள்ளபோதிலும் இதற்கான கேள்விப்பத்திரம் கோரும் நடைமுறையும், ஒப்பந்தம் கைச்சாத்திடலும் சரியான முறையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களமும் இந்த ஒப்பந்தத்தில் குறைகள் எதுவும் இல்லையென அறிவித்திருக்கிறது. எனவே இந்த ஒப்பந்தம் தொடர்பில் அரசை எவருமே குறைகாண முடியாது.

மேலும் மன்னார் கடற்பகுதியில் எண்ணெய் அகழ்வுப் பணிகளுக்காக 8 வலயங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு வலயம் மட்டுமே தற்போது எண்ணெய் அகழ்விற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

ஏனைய 7 வலயங்களையும் கேள்விப் பத்திரம் கோரல் அடிப்படையில் மிகச் சிறந்த நிறுவனங்களுக்குக் கையளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.'' - என்றார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் இந்தியாவின் 'கெயர்ன்' நிதியதிகாரி இந்திரஜித் பனார்ஜியும் கலந்துகொண்டார். (சி)

# மக்கள் முகம்



கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் பரிசாரகராகக் கடமையாற்றி வந்த கைதடி தெற்கைச் சேர்ந்த வேலன் சுப்பையா கடந்த 30ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

இவர் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் ஆயுள்கால உறுப்பினரும் நிலையத்தின் ஆரம்பகாலத் தலைவர்களில் ஒருவருமாவார். மற்றும் கைதடி இயத்தை அண்ணமார் ஆலயம், கைதடி கரவிடை அண்ணமார் ஆலயம் ஆகியவற்றின் தர்மகர்தத்தா சபை உறுப்பினர்களில் ஒருவருமாவார்.

* * *



சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் ஒரு முன்னணித் தலை வரும் புனர்வாழ்வு - கல்வி அபிவிருத்தி நிதியத்தின் பணிப் பாளருமான கதிரேசு சுப்பிரமணியம் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தி யப்பிரமாணம் செய்துள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதிபதி சுஜாதா எஸ்.அல்விஸ் முன்னிலையில் இவர் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இளவாலை ஹென்றி அரசர் கல்லூரியின் பழைய மாணவனுமான இவர் கடந்த 25 ஆண்டுகளாகச் சிறப்பாகச் செயற்பட்டுவரும் ஒரு சமூகப் பற்றாளரும் ஆவார்.

* * *

வடமராட்சி கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளராக (நிர்வாகமும் கல்வி அபிவிருத்தியும்) கடமையாற்றிய செ.உதயகுமார் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் IIஇற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கடந்த 31.12.2004 தொடக்கம் இப்பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (207)

* * *

யாழ்.பிராந்திய தபால் அத்தியட்சகர் கணக்கீட்டு அலுவலகத்தில் கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பணியாற்றிய எஸ்.சிற்சபேசன் பருத்தித்துறை தபால்நிலைய உதவித் தபாலதிபராக நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றுள்ளார். (218)

* * *

. வேலணை பிரதேச சபையில் தொழில்நுட்ப அதிகாரி தரம்Iஇல் கடமையாற்றிய ம.குணானந்தசுதன் நல்லூர் பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்று கடந்த முதலாம் திகதி கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

- இதேவேளை நல்லூர் பிரதேச சபையில் கடமையாற்றிய தொழில்நுட்ப அதிகாரி சோமசுந்தர ஐயர் சுசீந்திரராஜன் வேலணை பிரதேச சபையில் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (95)

# கைதடி கிழக்கு கள்ளிக்காடு கிராமத்தில் 24 பேருக்கு காணி உத்தரவுப் பத்திரம்

யாழ்ப்பாணம்,ஜூலை12

தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம எழுச்சித் திட்டத்தின்கீழ் உள்ள கைதடி கிழக்கு கள்ளிக்காடு கிராமத்தில் அரச காணிகளில் குடியிருக்கும் 24 பயனாளிகளுக்கு காணிகளுக்கான உத்தரவுப் பத்திரம் (பெர்மிட்) அண்மையில் வழங்கப்பட்டன.

கைதடி கிழக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனால் உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

பிரதேச குடியேற்ற அலுவலர் எஸ்.சண்முகரத்தினம் உட்பட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (202-207)

# இரசாயனவியல் வினாவிடைப் பரீட்சை

ஆஸ்திரேலிய இரசாயனவியல் கழகம் இலங்கை இரசாயனக் கல்லூரியின் அனுசரணையுடன் நடத்தும் இரசாயனவியல் வினாவிடைப் பரீட்சை எதிர்வரும் 19ஆம் திகதி காலை 9 மணிக்கு நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது. இப்போட்டி யாழ்.மாவட்டத்திலும் நடை பெற ஏற்பாடாகியுள்ளது.

யாழ்.மாவட்டத்திலிருந்து இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் சகல பாடசாலைகளின் மாணவர்களையும் பொறுப்பாசிரியர்களையும் அன்றைய தினம் காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தின் இரசாயனவியற்றுறை முன்பாகக் கூடுமாறு துறைத் தலைவர் கலாநிதி இ.ஸ்ரீகரன் கேட்டுள்ளார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாநகராட்சி மன்ற சுகாதாரப் பகுதியினரால் கைப்பற்றப்பட்ட காலாவதியான பொருள்களை முதலாவது படத்திலும் - பொருள்கள் எரியூட்டி அழிக்கப்படுவதையும் அருகில் சுகாதாரப் பரிசோதகர் நா.ரகுமார் பிரதம சுகாதாரப் பரிசோதகர் க.ஆ.ஜீவநாதன், நிர்வாக உத்தியோகத்தர் திருமதி பூ.மதிவதனி ஆகியோர் நிற்பதையும் இரண்டாவது படத்திலும் காணலாம்.
*(படங்கள்: லக்ஸ்மன்)*





# சப்ரகமுவ, வடமத்திய மாகாணங்களில் அரசை முழுமையாகத் தோற்கடிப்போம்!

## ஐ.தே.கட்சி மக்களுக்கு அழைப்பு

கொழும்பு,ஜூலை12

சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாண சபைத் தேர்தலில் தமது வாக்குப் பலத்தை முழுமையாகப் பயன்படுத்தி அரசை முற்றாகத் தோற்கடிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி அம்மாகாண மக்களிடம் நாடாளுமன்றில் வேண்டுகோள் விடுத்தது.

இத்தேர்தலில் இந்த அரசை விரட்டியடிப்பதன் மூலமே விலைவாசியில் சிக்கியுள்ள மக்கள் மீளமுடியும் - என்றும் அக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐ.தே.கட்சியின் பிரதம கொறடா ஜோஸப் மைக்கல் பெரேரா கடந்த புதன்கிழமை நாடாளுமன்றில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றுகையில் மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

பொருள்களின் விலையேற்றம் காரணமாகப் பொருள் கொள்வனவு வீழ்ச்சியடைந்து விடவே பணவீக்கம் 39 வீதமாகவுள்ளது. அதனால், அதைக் குறைத்தே அரசு சொல்கிறது.

அரசு பெற்றிருக்கும் தேவையற்ற கடன்கள் மற்றும் மேலதிக நாணயத் தாள்கள் அச்சடிப்புக் காரணமாகவே பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளன.

எமது நாட்டின் வருடாந்த இலாபம் 75 ஆயிரம் கோடி ரூபா. அதனால், அரசு கடந்த வருடம் மாத்திரம் 58 ஆயிரம் கோடி ரூபாவை கடன்களாக அடைக்கப் பயன்படுத்தியது. அந்தக் கடன்களைப் பெற்று பெரிய பெரிய கடன்களை அடைத்துக் கொண்டு வருகிறது. இந்தச் சிறிய நாட்டுக்கு இந்தமாதிரியான நிர்வாகம் சரிவராது. இது தற்போதைய நிலைமையை மேலும் மோசமாக்கும்.

இலங்கையில் இடம்பெறவுள்ள சார்க் மாநாட்டின்போது பாவிப்பதற்காக கோடிக் கணக்கான ரூபா பெறுமதிவாய்ந்த வாகனங்களை இறக்குமதி செய்யவும் அரசு தீர்மானித்துள்ளது.

இந்த மாதிரியான நிலையில் சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாண சபைகளைத் தேவையற்ற முறையில் கலைத்து தேர்தலை நடத்த முடிவு எடுத்துள்ளது இந்த அரசு.

இந்தத் தேர்தலில் இந்த அரசு நிச்சயம் தோற்கடிக்கப்படவேண்டும். அம்மாகாண மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசைத் தோற்கடிக்க வேண்டும் என நாம் அந்த மக்களிடம் பகிரங்க வேண்டுகோள் விடுக்கிறோம் - என்றார். (சி)

## பதவி வெற்றிடம்: விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை12

இலங்கை உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு இலங்கைக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப்பதிவாளராகப் பணியாற்றும் அல்லது ஒரு வருடத்துக்குக் குறையாத காலத்திற்கு செயற்பாட்டு ரீதியில் பயிற்சியில் ஈடுபட்டு சட்டத்தரணியாக சேவையாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 11ஆம் திகதிக்கு முன்னர் 'செயலாளர், நிதிச்சேவை ஆணைக்குழு, கொழும்பு-12' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 11.07.2008ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)


**ஃபக்ஸ் வசதி**

சாவகச்சேரியில் ஃபக்ஸ் வசதியுடன் கூடிய தொலைத்தொடர்புகளுக்குத் தொடர்பு கொள்ளவும்.

**அரசடி கொமினிக்கேசன்**
*கண்டி வீதி, பெரிய அரசடி, சாவகச்சேரி*
*(தாமோதரம்பிள்ளை வீதி முகப்பில்).*
T.P./Fax No: 021 226 3888
(சி/553710)



**திருப்பதி மானிப்பாய்**

I. வர்ண மீன்கள்
II. மீன்களுக்கான அனைத்து மருந்துகள்
III. மீன்தொட்டிக்கான அலங்காரப் பொருள்கள், UV பில்டர்கள், பவர் பில்டர்கள், ஒக்சிசன் மோட்டர்கள்.
IV. பல வீர்ண செவ்வரத்தைகள், பூஞ்செடிகள்
V அனைத்து விலங்குகளுக்கான பூச்சி மருந்துகள்
VI. கோழிகளுக்கான றணிக்கற், கம்பொறா
VII. நாய்களுக்கான ARV, பாவோ, டிஸ்ரெம்பர், பாவோ + டிஸ்ரெம்பர்.

அனைத்தும் பெற்றுக்கொள்ளலாம்.
*இல. 15, மெமோறியல் லேன், மானிப்பாய்.*
(76213)


## நெல்லியடி ம.ம.வி. ஆவணங்கள் கோருகின்றது

கரவெட்டி,ஜூலை12

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் இவ்வருட பரிசளிப்பு விழாவினை வெகு சிறப்பாகக் கொண்டாட உள்ளது.

இந்த விழாவையொட்டி வெளியிடப் படவுள்ள சிறப்பு மலரில் கல்லூரி தொடர்பான ஆவணங்கள் உள்ளடக்கப்படவுள்ளதால் பழைய மாணவர்கள், வித்தியாசாலையின் நலன் விரும்பிகள் தம்மிடம் உள்ள வரலாற்று ஆவணங்களைத் தந்து உதவுமாறு வித்தியாலய அதிபர் கேட்டுள்ளார். (202-207)


**பாலன் மில்ஸ்**

தேங்காய் கொப்பறா, இலுப்பைப்பருப்பு, எள் போன்றவற்றை 3கிலோவில் இருந்து 1000 கிலோ வரை உடன் எண்ணெயாக ஊற்றிப் பெற்றுக்கெள்ளலாம். மற்றும் No.1. R.S.T. மார்க் தேங்காய் எண்ணெய்யும் பெற்றுக்கொள்ளலாம்.

**பாலன் மில்ஸ்**
*மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.*
(76017)


**பரிசுத்த ஆவிக்கு ஜெபம்**

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும். பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணங் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்து இருப்பேன் என உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

[illegible]
(76227) [illegible]

## சேவையால் உயர்ந்த செம்மல்



சமூகத்தை விழிப்படையச் செய்யும் கல்விச் சாலைகளை முகாமை செய்யும் அதிபர் பணியானது ஏனைய பணிகளிலும் பார்க்க மகத்தானது. உரிய கல்வி இலக்கை நோக்கி பாடசாலைச் சமூகத்தையே நகர்த்திச் செல்லும் அதிபர் எல்லோரினதும் போற்றுதலுக்கும் பாராட்டுதல்களுக்கும் உரியவராகின்றார். இந்த வகையில் யா/தும்பளை சிவப்பிரகாச ம.வியில் பதினைந்து ஆண்டுகளாக அதிபர் பணியாற்றி சென்ற ஆண்டு அமரத்துவம் அடைந்த ம.கணபதிப்பிள்ளை அவர்களின் சேவை மக்களாலும் கல்விச் சமூகத்தாலும் பாராட்டப்பட்டதாகும்.

தான் பிறந்த ஊரிலேயே அதுவும் கல்வி கற்ற பாடசாலையிலேயே ஆசிரியராகவும் அதிபராகவும் சேவையாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தை மிகவும் பயனுள்ள முறையில் பயன்படுத்தி தனது அதிபர் பணியைச் சிறக்கச் செய்தவர் அமரர் கணபதிப்பிள்ளை ஆவார்.

இவர் ஆசிரியராக இருந்தகாலத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசிற் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்தும் விசேட இயலுமையுள்ள ஆசிரியராக மற்றவர்களால் இனங் காணப்பட்டார்.

1992ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் அதிபர் பதவியைப் பொறுப்பெடுத்தார். அன்றிலிருந்து பொறிவெடியில் சிக்கி அமரராகும்வரை பாடசாலையின் வளர்ச்சி பற்றி தீவிர ஈடுபாட்டுடன் உழைத்தார். இவரின் காலத்தில் பாடசாலை பல துறைகளிலும் வளர்ச்சி பெற்றது. குறிப்பாக பௌதீக வள விருத்தியில் தன்னிறைவு பெற்றது. மாடிக்கட்டடங்கள் இரண்டு, பல வகுப்பறைக் கட்டடங்கள், நவீன மலசலகூட வசதிகள், நூலகம், மைதானத்துக்காக 5 பரப்புக் காணி போன்றவவை இவரின் தீவிர முயற்சியின் பயனாக பாடசாலைக்குக் கிடைத்தன.

பாடசாலை விட்டபின் மாலைவேளைகளிலும் விடுமுறை தினங்களிலும் பாடசாலைக்கு வந்து பணியாற்றி, தன்நேரத்தை அர்ப்பணிப்புச் செய்து பாடசாலையின் மேம்பாட்டுக்காக அயராது உழைத்ததன் பயனாக, இன்று தரமான கல்வியை வழங்கும் இயலுமையைக் கொண்டிருக்கும் ஒரு பாடசாலையாக யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி. மேம்பாடடைந்துள்ளது.

பாடசாலைக்கு வருவோரை புன்சிரிப்போடு வரவேற்று அளவளாவி, அவர்களின் தேவையை நிறைவுசெய்தபின் வாசல் வரை வந்து வழியனுப்பி, எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்தார். இதன் காரணமாக பலமான நல்லுறவைப் பேணி சமூகத்திடமிருந்து பல்வேறு உதவிகளைப் பாடசாலைக்குப் பெற்றுக்கொடுத்தார். பாடசாலை அதிபருக்குரிய நிர்வாகப் பணிகளோடு வகுப்பறைகளிலே கற்பிப்பதையும் ஒரு கடமையாகக் கொண்டிருந்தார். அதிகாரிகளால் இவர் "கற்பிக்கும் அதிபர்" என்ற விசேட அடைமொழியால் பாராட்டப்பட்டார்.

மேலதிகாரிகளுடனான தொடர்புகளை சிறந்த முறையில் கடைப்பிடித்து தொடர்ச்சியான முரண்படா நிலையொன்றைத் தோற்றுவித்து அதனூடாக மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்று பாடசாலையை வளர்த்தெடுத்தார். அமரர் கணபதிப்பிள்ளை அவர்கள் காலையில் எழுந்து தனக்கு அருகில் இருக்கும் மூன்று ஆலயங்களுக்கும் சென்று வழிபாடியற்றிவிட்டு ஏழரை மணிக்கே பாடசாலைக்கு வந்து பாடசாலை முகப்பில் இருக்கும் சரஸ்வதி சிலையை மனதால் வணங்கிவிட்டு தனது நாளாந்த கடமைகளை ஆற்றும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். சிவப்பிரகாசம் என்ற பாடசாலையின் பெயருக்கு ஏற்றாப்போல் சைவப்பாரம்பரியத்தை வாழ்க்கை நெறியாகப் பேணிய தலைமகனாக வாழ்ந்து காட்டியுள்ளார்.

கோட்டக்கல்வி அதிகாரி போன்ற பதவிகள் அவரைத் தேடி வந்தபோதும் அவற்றை ஒதுக்கிவிட்டு பாடசாலை அதிபர் பணியிலே தன்னை அர்ப்பணித்து சேவையால் உயர்ந்த செம்மலாக யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் பொற்காலத்தின் மூலகர்த்தாவாக இருந்து சேவையாற்றி யாரும் எதிர்பாராத வகையில் பொறிவெடியில் சிக்குண்டு அகாலமரணமெய்திய அமரர் கணபதிப்பிள்ளை அவர்களின் சேவையை நினைவுகூர்வதோடு அவர் நேசித்த கல்விப் பணியையும் சமூக சேவையையும் சிறக்கச் செய்வதே நாம் அன்னாருக்குச் செய்யும் கைம்மாறாகும்.

**கூ.ஞ.கனகலிங்கம்**, *அதிபர், யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம், பருத்தித்துறை.*

## நீத்தார் நயப்புரை


**ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி**



*அமரர்* வல்லிபுரம் நாகேஸ்வரன்

மலர்வு 19✱04✱1966

உதிர்வு 25✱07✱2003

ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
மாறாது உம் நினைவு
மீண்டும் உம்மை எப்போ காண்போம்.

முத்துமாரியம்மன் கோயிலடி, அல்வாய் வடக்கு.
V.நாகேஸ் ஐஸ்கிறீம் குடும்பத்தினர்.
(76226)



**அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்**



*அமரர்* வீரகத்தியார் சேனாதிராசா
(கண் வைத்தியர்)

கடந்த 12.06.2008 வியாழக்கிழமை எம்மை விட்டுப் பிரிந்த எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு உடன் வந்து உதவிகள் புரிந்தவர்களுக்கும் தபால்; தந்தி, பத்திரிகை, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (12.07.2008) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

வரணி வடக்கு,
வரணி.
(76220)
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வெள்ளைக்காரர்கள் தேசத்தில் இன்று 'பொங்கு தமிழ்' எழுச்சி

ஈழத் தமிழர்களின் வேணவா - அபிலாஷை - இன்று உலக நாடுகள் எங்கும் 'பொங்கு தமிழ்' ஆகப் பொங்கிப் பிரவகித்துக்கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் இன்று லண்டன் மாநகரில் தமிழர் உணர்வெழுச்சியை மடை திறந்த வெள்ளம் போல் 'பொங்கு தமிழ்' நிகழ்வில் காணக்கூடியதாக இருக்கும்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் 'பொங்கு தமிழ்' ஆக முகிழ்ந்த இந்நிகழ்வு இன்று உலகம் முழுவதிலும் பரந்து வாழும் ஈழத் தமிழர்களின் இதய எழுச்சியை - உள்ளத்து வேணவாவை - அபிலாஷை உணர்வை - ஓங்கி ஒலிக்கும் ஒரு சர்வதேசப் புரட்சி நிகழ்வாக உருவெடுத்து வருகின்றது.

விடுதலை வேண்டும் தமிழர்களின் ஒருமித்த குரலாக 'பொங்கு தமிழ்' இன்று லண்டனில் ஒலிக்கப்போகின்றது.

புலம்பெயர் நாடுகள் பலவற்றிலும் வாழும் தமிழர்கள் தங்களின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தும் நோக்கில் அண்மைக்காலமாக நடத்திவரும் 'பொங்கு தமிழ்' நிகழ்வுகள் உருவேறி, உணர்ச்சிப் பிழம்பாகி, இனவெழுச்சியை வெளிப்படுத்தும் வரலாற்றுப் பெரு நிகழ்வுகளாக மாறி வருகின்றன.

அந்த வகையில் கடைசியாகக் கனடாவின் ரொறன்ரோ நகரம், ஆஸ்திரேலியாவின் மெல்போர்ண் நகரம், சுவிஸின் போர்ண் நகரம்ஆகியவற்றில் இடம்பெற்ற மூன்று 'பொங்கு தமிழ்' நிகழ்வுகளும் புலம் பெயர்ந்த தமிழர்களின் பேரெழுச்சியை சர்வதேசத்துக்குச் சந்தேகமறப் பறைசாற்றும் முக்கிய அரங்கேற்றங்களாக அமைந்தன.

அவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தால் போல - மகுடம் சூட்டுமாற் போல - இன்றைய லண்டன் 'பொங்கு தமிழ்' நிகழ்வு இடம்பெறும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றன.

இன்றைய நிகழ்வு இரண்டு விடயங்களில் - பரிமாணங்களில் - முக்கியத்துவம் பெறுகின்றது.

ஒன்று - களத்தில் தங்கள் உரிமைக்காகவும், கௌரவ வாழ்வுக்காகவும், விடுதலைக்காகவும், விடியலுக்காகவும் வேள்வித்தீயில் குளிக்கும் தமது ஈழத் தமிழ்ச் சோதரர்களுக்கான தங்களின் ஒருமித்த - ஏகோபித்த - ஐக்கியப்பட்ட ஆதரவை ஒன்றுபட்டு ஒரு குரலாக ஒலிப்பதன் மூலம் உலகுக்கு எடுத்துக்காட்டுவது.

அடுத்தது - அதன் மூலம் அந்த மக்களுக்கு நியாயம் செய்யும்படி சர்வதேச சமூகத்தை வலியுறுத்திக் கேட்பது.

இந்த இரண்டு வகையிலுமே இன்று லண்டனில் நடைபெறும் 'பொங்கு தமிழ்' நிகழ்வு சிறப்புப் பெறுகின்றது. அதிலும் இந்த இரண்டாவது விடயத்தில் - அதாவது ஈழத் தமிழர்களுக்கு நியாயம்செய்யும்படி பிரிட்டிஷ் அரசையும் மக்களையும் வலியுறுத்தித் தூண்டும் அம்சத்தில் - இந்த நிகழ்ச்சிக்கு வரலாற்றுக் கடமையும் இருக்கின்றது.

இன்று இலங்கையில் ஈழத் தமிழினம் இத்துணை அவலத்தோடும், பேரழிவோடும், மோசமான மனிதாபிமான நெருக்கடிகளுக்குள்ளும் சிக்குப்பட்டு, அடிமை வாழ்வு வாழ்ந்து, அந்தரிக்கின்றது என்றால் அத்தவறுக்குப் பொறுப்பேற்க வேண்டிய தரப்புகளில் பிரதானமானது வெள்ளைக்காரரின் இந்த ஆங்கிலேய தேசம்தான். இத்தகைய பெருந்துயர் வாழ்வுக்குள் ஈழத் தமிழர்கள் சிக்கிச் சிறைப்பட பிரதான காரண கர்த்தாக்களே இந்த பிரிட்டிஷ் தேசத்தின் வெள்ளைக்கார ஆட்சிப்பீடம்தான்.

இலங்கைத்தீவில் தமிழ் இனமும், சிங்கள இனமும் வெவ்வேறு தேசியங்களாக - தனித் தனியாகவும் தெளிவாகவும் வேறுபட்ட இரு புவியியல் பிராந்தியங்களைத் தாயகமாகக் கொண்டு - வெவ்வேறான மொழி, வெவ்வேறான கலாசாரம், வெவ்வேறான பண்பியல்புகள், வழக்காறுகள் கொண்டவையாக - தெளிவாகச் சொல்வதானால் வேறுபட்ட யேதசங்களாக - வரலாற்றுக் காலம் முதலே வசித்து வந்தன.

இந்த இலங்கைத் தீவை தங்களுடைய சுரண்டலுக்காக ஆரம்பத்தில் ஆக்கிரமித்த போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் கூட இத்தகைய இரு வேறுபட்ட தேசக் கட்டமைப்புகளை ஏற்றுக் கொண்டு, அதன் அடிப்படையிலேயே தமது ஆக்கிரமிப்பு ஆட்சி நிர்வாகத்தைத் தொடர்ந்தனர். அவர்களின் பின்னர் இந்த ஆக்கிரமிப்பு அதிகாரத்தைப் பிடுங்கிக் கொண்ட ஆங்கில தேசமும் அதையே தொடர்ந்தது.

ஆனால் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் - 1833 ஆம் ஆண்டில் - தன்னுடைய அதிகார நிர்வாக வசதிக்காக, அதுவரை இவ்வாறு இரண்டு கட்டமைப்புகளாக இருந்த தமிழர் தேசத்தையும்,சிங்களவர் நாட்டையும் ஒன்றிணைத்து, ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்த பிரிட்டிஷார், 1948 இல் இலங்கையை விட்டுத் தாம் வெளியேறும்போது, முன்னர் தங்கள் வசதிக்காகத் தாங்கள் இணைத்த தேச நிர்வாகக் கட்டமைப்பைப் பிரித்துக் கொடுக்காமல் - இலங்கைத் தீவின் பெரும்பான்மையினரான சிங்களவர்களிடம் சிறுபான்மையினரான ஈழத் தமிழர்களின் தேசியத்தையும், தமிழர் தேச இறைமையையும் அடிமைச் சாசனமாக ஒப்படைத்து - விட்டுச் சென்றனர்.

அப்படி அவர்கள் அன்று இழைத்த பெரும் வரலாற்றுத் தவறின் தொடர்ச்சியே - நீட்சியே - இன்று இந்த இலங்கைத் தீவில் பெரும் மனிதப் பேரழிவுக்கு இடமளிக்கும் கொடூரப் போராக விரிந்திருக்கின்றது. தாம் இழைத்த அந்த வரலாற்றுத் தவறைச் சீர் செய்யத் தவறிய பிரிட்டிஷார், அந்தத் தவறின் பாதிப்பிலிருந்து விடுபடுவதற்காகத் தமிழர்கள் நடத்தும் நியாயமான போராட்டத்தை, 'பயங்கரவாதமாக' அடையாளம் கண்டு, புலிகள் அமைப்பைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்ததன் மூலம் மேலும் சரித்திரத் தவறு இழைத்துள்ளது.

இவ்வாறு வரலாற்றில் தவறின் மீது தவறிழைக்கும் வெள்ளைக்கார சாம்ராஜ்யத்துக்கு உறைப்பாக உண்மையை உணர்த்துவதாக இன்றைய 'பொங்குதமிழ்' நிகழ்வு அமையவேண்டும்.

# பிணக்குகளில் காணாமல் போவோர்களின் தகவல்களைப் பெறுவதில் ஐ.சி.ஆர்.சி.எடுக்கும் முயற்சி

''நடு இரவில் படைத் தரப்பினர் வந்தார்கள். ஆண்களை-தகப்பன், மகன் அல்லது கணவன் பிடித்துக் கொண்டு ஆள் அரவமற்ற வீதிகளுக்குள் மறைந்து விட்டார்கள். எங்கே கொண்டு செல்கிறார்கள் என்பதே தெரியாது''

அல்ஜீரியாவில் நடந்த விடுதலைப் போரின்போது 1958 ஆம் ஆண்டு ஐ.சி.ஆர்.சி. தலைவருக்கு ஜெக்ஸ் வோர்ஜஸ், மைக்கல் சாங்றியன் ஆகிய சட்டத்தரணிகள் எழுதியிருந்த ஒரு கடிதத்தின் சில வரிகள் இவை.

உலக அளவிலான ஒரு கதையை இது வெளிப்படுத்தி நிற்பதுதான் இதில் தெரியும் துன்பகர மான விடயம்.

ஆயுத மோதல்கள் அல்லது உள்ளூர் பிணக்குகளின் போது மக்கள் காணாமல் போனமை பற்றி இது பேசுகின்றது. அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? தமது நேசத்துக் குரி யவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை யே இக் குடும்பங்கள் தெரிந்து கொள்ள ஆவலு டன் எதிர்பார்த்து நிற்கின்றன.

சர்வதேசசெஞ்சிலுவை-செம்பிறை சங்கத்தின் சஞ்சிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் இவ்வாறு எழுதியுள்ளது. அத்தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

இம் மக்களின் காத்திருப்புக்கு முடிவே இல்லை. அவர்களின் அங்கலாய்ப்புக்கு எல்லையே இல்லை. நிச்சயமற்ற நிலைமைதான் தாங்கிக் கொள்ள முடியாத துன்பம்.

இந்தக் கேள்விகளுக்கு விடை காண்பதற்கு களத்தில் செயல்படுவதானது மலையில் ஏறுவது போன்றகடினமுயற்சி. சகிப்புத் தன்மையோடும் உணர்ச்சியோடும் செயல்பட வேண்டியிருக்கும்.

**ஐ.சி.ஆர்.சி எடுக்கும் முயற்சி**

ஒவ்வொரு கண்டத்திலும் காணாமல் போயுள்ள ஆயிரக்கணக்கானவர்களின் தீர்வு காணப்படாத பிரச்சினைகளுக்கு முடிவு காண்பதற்கு



**காணமல் போன தமது உறவினர்கள் பற்றிய தகவல்களை ஐ.சி.ஆர்.சி.யின் புத்தகம் ஒன்றில் தேடிக் கொண்டிருக்கும் ஒரு குடும்பம்**

உள்ளூர் மக்களின் ஆதரவுடன் ஐ.சி.ஆர்.சி முயற்சி எடுத்து வருகின்றது.

பிணக்கில் சம்பந்தப்பட்டிருக்கும் அனைவரோடும் அதிகாரிகளை முதல் கட்டமாகக் கொண்டு பேச்சு வார்த்தைகளை முதலில்- முக்கியத்துவம் கொடுத்து நடத்துகின்றோம். இம் மாதிரி விடயங்களில் விளக்கங்களைப் பெறுவதில் மக்கள் மௌனம் சாதிப்பதனால் பெரும் தடங்கல்கள் ஏற்படுகின்றன. இருந்தாலும் அவ்வப்போது தகவல்கள் வெளிப்படுகின்றன. இவைகள் சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அறிந்து கொள்வதற்கான அவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்-

என்று அத்தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# இலங்கைக் கடற்படையின் தாக்குதலைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் வியாழனன்று ஆர்ப்பாட்டம்

## கூடவே கடையடைப்பும் நடைபெற்றது

ராமநாதபுரம், ஜூலை 12

இலங்கைக் கடற்படையின் தாக்குதலைத் தடுத்து நிறுத்த மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று முன்தினம் வியா ழக்கிழமை பாம்பன் பாலம் அருகே ஆர்ப்பாட்டம் செய்தனர். ராமேஸ்வரத் தில் கடையடைப்புப் போராட்டமும் நடைபெற்றது.

கடந்த 2 ஆம் திகதி பாக்கு நீரிணைப் பகுதியில் மீன்பிடித்துக் கொண் டிருந்த ராமேஸ்வரம் மீனவர்களை இலங்கைக் கடற் படையினர் பிடித்துச் சென்று நிர்வாணமாக்கிச் சித்திரவதை செய்தனர். இதைக் கண்டித்து 3 ஆம் திகதி முதல் ராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஒரு கட்டமாக பாம்பனில் நேற்று முன்தினம் மறியல் போராட்டம் நடந்த முடிவு செய்தி ருந்தனர். போராட்டத்தை கைவிட வலியுறுத்தி நேற்று முன்தினம் மாலை இராமநாதபுரம் கலெக்டர் கிர்லோஷ் குமார் தலைமை யில் பேச்சு நடந்தது.

சென்னையில் மீன்துறை செயலாளர் மற்றும் மீன்துறை கமிஷனரிடம் எதிர்வரும் திங்களன்று மீனவர் சங்க பிரதிநிதிகள் பேச்சு நடத்த ஏற்பாடு செய்யப்படும். துப்பாக்கிச் சூட்டில் இறந்த மீனவர் சந்தியாகு குடும்பத்துக்கு கூடுதலாக 2 லட்சம் ரூபா வழங்கப்படும் - என கலெக்டர் கூறிய தையடுத்து மறியல் போராட்டத்தைக் கைவிட்டு, கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, நேற்று முன்தினம் பாம்பன் பாலம் அருகே மீனவர்கள் ஆர்ப்பாட் டம் நடத்தினர். கோட்டைப் பட்டினம் மீனவர்களும் இதில் பங்கேற்றனர். ராமேஸ்வரம் பகுதி வர்த்தக சங்கத் தினரும் மீனவர்களுக்கு ஆதரவாக கடையடைப்பு நடத்தி, ஆர்ப்பாட் டத்தில் பங்கேற்றனர். தே.மு.தி.க., இந்திய கம்யூனிஸ்ட், பா.ம.க. உட்பட பல்வேறு கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

# கொக்குவில் இந்துவில் இன்று பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

கொக்குவில் இந்துக்கல்லூரியின் பரிசளிப்பு நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானமும் கலந்து கொள்வர். (1)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 29 | 13.07.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | ஏகாதசி விரதம் |
| நட்சத்திரம் : | விசாகம் |
| | மு.இ. 06.25 வரை |
| சுபநேரம் : | 09.00 - 10.30 |
| ராகுகாலம் : | 04.30 - 06.00 |

# கதிர்காமம் ஆடிவேல் உற்சவத்தையொட்டி பாதுகாப்புக் கடமையில் 6,000 பொலிஸார்

கொழும்பு,ஜூலை12

கதிர்காமத்தில் ஆடிவேல் உற்சவம் ஆரம்பமாகியுள்ளதை யொட்டி அங்கு ஆறாயிரம் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட் டுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் 24 மணி நேரமும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள் ளனர். அத்துடன் ஆலயத்தின் உள் வீதியிலும் வெளி வீதிகளிலும் ரோந்து வருவதோடு வாகனங்களி லும் கண்காணிப் பில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆலய புனிதவளாகத்தினுள்செல்லும் வழி, வெளியேறும் வழி தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அங்கும் பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். ஆலயத்தின் உட் செல்லும் நுழைவாயிலில் ஆண் மற்றும் பெண் என வேறாகப் பிரிக் கப்பட்டு அவர்கள் கொண்டு செல்லும் பொதிகள் சோதனையிடப்படுவதோடு உடற்பரிசோதனையும் செய்யப்படுகிறது.

மாணிக்ககங்கையில் 2 அடி தண்ணீர் ஓடுகிறது. கங்கை கரை சுத்தமாக உள்ளதுடன் ஆடை மற்றும் தற்காலிக தகரக் கொட்டில்களை 'லைப் போய்' நிறுவனம் அமைத்துக் கொடுத் துள்ளது. கங்கைக் கரையில் கடந்த காலங்களிலிருந்த சிகை அலங்கரிப்பு நிலையங்கள் இம்முறை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இம்முறை மொட்டையடிப்போர் புனித பிரதேசத்திற்கு வெளியேயுள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களில் மாத்திரமே அதனை மேற்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் ஆங்கில நூல்வெளியீட்டு விழா நாளை

வவுனியா, ஜூலை12

வவுனியா விஞ்ஞானச் சங்கத்தின் ஆதரவில் யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசனின் தொகுப்பில் உருவான 'சாந்தனது எழுத்துலகம் ஒரு விமர்சனத் தொகுப்பு' என்னும் நூலின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கக் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் எஸ்.சிவபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் க. இராசதுரையும், விசேட விருந்தினராக வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம். மனோகரனும், கௌரவ விருந்தினராக நாடக எழுத்தாளரும் உளவளத் துணைவாளருமான பி.எஸ்.ஏ. ஆனந்தராஜாவும் கலந்து கொள்வார்கள்.

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் விரிவுரையாளர் பி. பரமேஸ்வரன் அறிமுகவுரை நிகழ்த்துவார். (50)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாகாண விளையாட்டு விழா ரத்துச் செய்யப்பட்டதை யாழ்ப்பாணத்தில் அதிகாரிகள் தெரியப்படுத்தாதது ஏன்?

வவுனியாவில் இடம்பெறவிருந்த மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளார்கள்.

இவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் திருமலையில் இருந்து கப்பல் மூலம் தெல்லிப்பழையை வந்தடைந்தார்கள். இம்மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் கதைத்தபோது மிகவும் கோபத்துடன் கதைகளை கூறினார்கள்.

தாம் ஏமாற்றப்பட்டுவிட்டதாக அவர்கள் மனம் நொந்து கொண்டார்கள். அவர்கள் தங்கள் அனுபவத்தை பின்வருமாறு விபரித்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நாங்கள் மாலை 6.00 மணியளவில்தான் கப்பலில் புறப்பட்டோம்.

போட்டி ரத்து செய்யப்பட்ட விடயம் நாங்கள் கப்பலுக்குப் புறப்பட்ட தினமன்று பிற்பகல் ஒரு மணியளவில் யாழ். மாவட்ட கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் அதனை அறிந்திருந்தும் எங்களுக்கு அந்த விடயத்தைத் தெரியப்படுத்தவில்லை. இதனால் நாங்கள் கப்பலில் சென்று ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளோம். போட்டி ரத்து செய்யப்பட்ட விடயம் உடனே எமக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தால் நாங்கள் அங்கு சென்று அலைக்கழிய வேண்டியிருந்திருக்காது.

சிங்கள மகா வித்தியாலத்தில் இருந்து கப்பலுக்கு செல்வதற்காக 12.45 மணியளவில் பஸ்ஸில் தெல்லிப்பழை கொண்டு செல்லப்பட்டோம். மீண்டும் அங்கிருந்து மாலை 4.00 மணியளவில் தான் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு மாலை 6.00 மணியின் பின்னரே கப்பல் திருமலைக்கு புறப்பட்டது.

இந்த சுமார் 5மணித்தியால இடைவெளியில் போட்டி ரத்து செய்யப்பட்ட விடயத்தை உரிய அதிகாரிகள் ஏன் தெரியப்படுத்தவில்லை என்பதுதான் எமது கேள்வி. நாம் வீணாக பல்வேறு கஷ்டங்களை அனுபவித்துத் திரும்பியுள்ளோம்.

மாலையில் புறப்பட்ட கப்பலில் நாம் அடுத்த நாள் நண்பகல் 1.30 மணியுளவில் திருமலைத்துறை முகத்தை அடைந்து விட்டோம். கப்பலில் பயணம் செய்த வீரர்கள், வீராங்கனைகளில் 85 வீதமானவர்கள் வாந்தியெடுத்த வண்ணமே இருந்தார்கள். நல்ல சாப்பாடும் கிடைக்கவில்லை.

கப்பல் துறைமுகத்தை அடைந்து விட்டது. இறங்கலாம் என நினைத்து சந்தோஷப்பட்டோம். எனினும் அதுவும் நடக்கவில்லை. கப்பலில் இருந்து இறங்க எமக்கு அனுமதி வழங்கப்படவில்லை. கப்பலை திருப்பி மீண்டும் காங்கேசன்துறைமுகத்திற்கு கொண்டு செல்லும்படி அறிவித்தல் கிடைத்துள்ளதாக எமக்குத்தகவல்கிடைத்தது.

கடல் கொந்தளிப்பு ஒருபுறம். முதல் நாள் மாலை கப்பலில் ஏறிய நாம் சுமார் 18 மணித்தியாலயங்களுக்கு மேல் வாந்தி எடுத்தவண்ணம் உணவு, குடிதண்ணீர் கூட இல்லாமல் கப்பலில் இருந்தோம். மீண்டும் கப்பலில் திரும்பச் செல்வது என்பதைக் கேட்டதும் இப்படியானதொரு விளையாட்டுப் போட்டி வேண்டுமா? என்ற கேள்வி எல்லோரிடமும் எழுந்தது. எதிர்காலத்தில் இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதில்லை என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் எழுந்தது. அந்த அளவுக்கு நாம் பல்வேறு துன்பங்களை அனுபவித்து விட்டோம்.

**மனிதநேயம் கொண்ட கப்பல் கப்டன்**

துறைமுகத்தில் இறக்காது கொந்தளிக்கும் கடலில் கப்பல் நங்கூரம் இட்டு தத்தளித்துக் கொண்டிருந்தமையால் தொடர்ந்து

**விண்ணன்**

மாணவர்கள் வாந்தி எடுத்துக்கொண்டே இருந்தார்கள். எமது பயணத்தின் போது நாம் பட்ட துன்ப, துயரங்களை நேரில் கண்ட மனிதநேயம் மிக்க ஒரு மனிதனாக கப்பல் கப்டன் இந்த நேரத்தில் செயல்பட்டமை என்றும் மறக்க முடியாத ஒரு சம்பவம்.

கப்பல் கப்டன் உடனடியாக உரிய அதிகாரிகளுடன் தொர்டர்பு கொண்டு மாணவர்கள் மீண்டும் கப்பலில் பயணத்தை தொடரமுடியாத உடல் நிலையில் உள்ளார்கள். அவர்கள் வாந்தியெடுத்து மிகவும் களைப்படைந்தும், சோர்வடைந்தும் காணப்படுகின்றார்கள் என்று வாதிட்டு சுமார் இரண்டு மணித்தியாலத்தின் பின்னர் எங்களைத் துறைமுகத்தில் இறங்க அனுமதி வழங்கப்பட்டது.

நீண்ட பயணம், வாந்தி எடுத்தது. உணவு இல்லை. நாம் கப்பலில் இருந்து தரை இறங்கியதும் திருமலையிலுள்ள மக்கெய்சர் விளையாட்டரங்குக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். ஆண்கள் அங்கு தங்க வைக்கப்பட்டனர்.

பெண்கள் பாடசாலைகளுக்கு கொண்டு சென்று தங்கவிடப்பட்டனர். இரவு உணவு மற்றும் தேனீர் என்பனவும் வழங்கப்பட்டன. களைப்பாக இருந்தமையால் ஆண்கள் விளையாட்டரங்கில் படுத்து நல்ல உறக்கத்தில் இருந்தார்கள்.




அந்த நேரத்தில் திடீரென வாகனத்தில் பல படையினர் அந்த இடத்தில் வந்து இறங்கினார்கள். அவர்கள் எங்களுக்கு அண்மையில் ஆயுதங்களுடன் நள்ளிரவு நேரம் நின்றமை பயத்தை ஏற்படுத்தியது.

மாணவர்களுடன் பொறுப்பாக நின்ற ஆசிரியர்கள் படைத்தரப்பினரிடம் கதைத்போது இங்கு மாணவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள விடயம் தமக்குத் தெரியாதெனவும் தாம் இரவு கோணேஸ்வரம் பகுதியில் இருந்து பாய்ச்சியை வெளிச்சத்தில் ஆள்களைக் கண்டுவிட்டு வருகைதந்ததாகவும் கூறினார்கள். பின்னர் அவர்கள் சென்று விட்டனர்.

## இனிமேல் போட்டிகளுக்குச் செல்வதில்லை என்ற நிலையில் ஏமாற்றத்துடன் திரும்பிய ஆசிரியர்கள், மாணவர்கள்

போட்டி ரத்துச் செய்யப்பட்ட விடயம் அறிந்து கொண்ட பின்னர் அடுத்த கட்டம் யாழ்ப்பாணம்செல்லும் பிரச்சினை. எனினும் வடமாகாண கல்வித் திணைக்களத்தை சேர்ந்த தர்மலிங்கம் என்பவர் அனைவரினதும் உணவுப் பிரச்சினையில் கூடிய அக்கறை எடுத்துச் செயல்பட்டார்.

**உணவின் தரமின்மை**

உணவைக் கொண்டு வருவதிலும் விநியோகிப்பதிலும் இவர் தனது பங்களிப்பை நல்ல முறையில் வழங்கியிருந்தார். எனினும் உணவு சமைத்தவர்கள் அக்கறையற்ற தன்மையுடன் செயற்பட்டதால் உணவு தரமற்றதாகக் காணப்பட்டது. உப்பு இல்லை. புளி இல்லை. சோறு அரிசித் தன்மை என உண்ண முடியாத அளவுக்கு உணவு மிகவும் மோசமாகக் காணப்பட்டது. இதனால் பலர் தமது பணத்தச் செல வழித்து கடைகளில் உணவைச் சாப்பிட்டார்கள்.

வட மாகாண கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் வீர வீராங்கனைகள் இருந்த இடத்திற்கு வந்து அங்கிருந்த அதிகாரிகளுடன் கதைத்து விட்டு போய்விட்டார்கள். யாழ்ப்பாணத்தில் பலத்த சிரமங்கள், கஸ்டங்களுக்கு மத்தியில் சென்ற எங்களுடன் அவர்கள் எந்தவிதமான கதையும் கதைக்கவில்லை.

நாம் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று விட்டு திரும்பிவரும்போது திருகோணமலை அரசாங்க அதிபர் எங்களுடன் கதைத்து விட்டு எங்களுக்கு உணவுப் பொருள்களை வாங்குவதற்கு 50 ஆயிரம் ரூபா பணத்தை கொடுத்து எங்களை பாராட்டி விட்டுச் சென்றார்- என்றார்கள் திருமலை சென்று திரும்பியவர்கள்.

***சிங்கள அரச அதிபரின் பெருந்தன்மை***

எம்மவர்கள் எம்மை ஏன் இங்கு வந்தீர்கள் என்றுகூடக் கேட்காமல் புறந்தள்ளிச் செல்ல சிங்கள அதிகாரியாக இருந்த அரச அதிபர் எங்களுக்கு ஏனோ மதிப்பளித்து எங்களுடன் கதைத்து விட்டுச் சென்றமை மகிழ்ச்சியாக இருந்தது எனப் பாடசாலை மாணவர்கள் தெரிவித்தார்கள்.

இவ்வாறு எமது பயணம் ஒரு துயரமான பயணமாக அமைந்தமையால் இனி மேல் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதில்லை என்ற முடிவு எம்மிடையே பலருக்கு ஏற்பட்டதெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

போட்டி ரத்து செய்யப்பட்ட விடயத்தை அதிகாரிகள் உடனே எமக்குத் தெரியப்படுத்தியிருந்தால் இவ்வளவு சிரமங்களும் தவிர்க்கப்பட்டிருக்கும் எனவும் அவர்கள் விசனத்துடன் தெரிவித்தனர்.

அதிகாரிகளின் அசமந்தப் போக்குக் காரணமாக ஏற்பட்ட நிலைமையினால் மாணவர்களும், ஆசிரியர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டமை அவர்களின் உள்ள வெளிப்பாடுகளிலிருந்து தெரியவந்தது.

# விபத்தில் சிக்கிய நண்பனுக்கு உதவ வந்த மன்னார் இளைஞர் சிலாபத்தில் கைது!

## பிரதியமைச்சரிடம் முறைப்பாடு

புத்தளத்தில் விபத்தில் சிக்கிய நண்பனுக்கு உதவி செய்வதற்காக மன்னாரில் இருந்து வருகை தந்த இளைஞரைச் சந்தேகத்தின் பேரில் சிலாபம் பொலிஸார் கைது செய்து தடுத்துவைத்துள்ளனர் என்று உறவினர்கள் மலையக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், வாழ்க்கைத் தொழில் நுட்ப பயிற்சி பிரதி அமைச்சருமான பெ.இராதாகிருஷ்ணிடமும் மீள்குடியமர்வு அனர்த்த நிவாரண சேவை அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

மன்னார் அடம்பனைச் சேர்ந்த தனியர் பஸ்சேவை நேரக்கணிப்பீட்டளாரான சுப்பிரமணியம் சிவகுமார் (வயது - 27) என்பவரே சிலாபம் பொலிஸாரினால் கடந்த 5 ஆம் திகதி ஹோட்டலில் தேநீர் அருந்திக்கொண்டிருக்கும்போது கைது செய்யப்பட்டவராவார்.

விபத்தில் காயமடைந்த புத்தளத்தில் வசிக்கும் நண்பரான விக்கிரமசிங்க குணசிங்கவுக்கு சிலாபம் வைத்தியசாலையில் இடம்பெறவிருந்த சத்திரசிகிச்சைக்கு உதவுவதற்கு அங்கு சென்றபோது, சத்திரசிகிச்சைக்கு குணசிங்கவை அழைத்துச் சென்றபோது அவருடைய அடையாள அட்டை கையடக்கத் தொலைபேசி இதர பதிவுக்கடிதங்கள் அனைத்தும் சிவகுமாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அவைகளைப் பெற்றுக்கொண்டு வெளியில் சென்று தேநீர் பருகிக்கொண்டிருந்தபோது அயலவர்கள் இரண்டு தொலைபேசியுடன் ஒரு தமிழர் இருப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததை அடுத்தே சிவகுமார் கைதுசெய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்ட குணசிங்கம் சுகமடைந்து வீடு திரும்பி தகவலறிந்து சிலாபம் பொலிஸாரிடம் சகல விவரங்களையும் தெரிவித்த போதும் இரண்டு கையடக்கத் தொலைபேசி, குணசிங்கவின் தேசிய அடையாள அட்டை என்பவற்றை வைத்திருந்தது குற்றம் என்று கூறி பொலிஸார் எச்சரித்தார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுகமடைந்த குணசிங்கவும் இது தொடர்பாக தொலைபேசி மூலம் தனது விளக்கத்தை பிரதி அமைச்சருக்குத் தெரிவித்து சிவகுமாரை விடுவித்துத் தருமாறு கோரியுள்ளார். இவ்விடயம் தொடர்பாக சிவ குமார் சிலாபம் பிராந்திய பொலிஸ்மா அதிபர் வீ.ஏ.எஸ்.பி. நாணயக்காரவுக்கும் அறிவித்துள்ளதுடன் சிலாபம் பொலிஸ் அத்தியட்சகர் குணரட்ணவுடனும் தொடர்பு கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புகையிலை பொதிக்குள் வந்த போதைப் பொருள்கள் மீட்பு

கொழும்பு, ஜூலை 12

புகையிலை பொதிக்குள் வைத்து இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட 5,840 சிறிய பைக்கற்றுகளில் அடைக்கப்பட்டிருந்த போதைப் பொருள்களைக் கற்பிட்டிப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கற்பிட்டிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லஹ்மன் லங்வல தலைமையில் சென்ற பொலிஸ் குழு கற்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த கல்லடி என்னுமிடத்தில் வைத்து இக்கடத்தல் பொருள்களைக் கைப்பற்றியது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் புத்தளம் மாவட்ட நீதிமன்றில் அஜர் செய்யப்பட்ட போது [illegible] திகதிவரை [illegible] நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. (சி)

# இலங்கையும் இந்தியாவும் இம் மாதம் பொருளாதார உடன்படிக்கை

## 'சார்க்' வேளையில் கைச்சாத்தாகும்

கொழும்பு, ஜூலை 12

கொழும்பில் 15 ஆவது சார்க் உச்சி மாநாடு இடம்பெறும் வேளையில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் முழுமையான பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கை கைச்சாத்தாகவுள்ளது.

சார்க் உச்சி மாநாட்டின் போது இந்தியப் பிரதமரும் இலங்கை ஜனாதிபதியும் இந்தப் பொருளாதார உடன்படிக்கையில் கைச்சாத்திடுவார்கள் என இந்தியாவின் வர்த்தக செயலாளர் கோபால் கே.பிள்ளை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மிகப் பெரிய சம அந்தஸ்துள்ள பொருளாதார சகாவாக இந்தியா மாறியுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

முழுமையான பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கை அடுத்த மூன்று வருடங்களில் படிப்படியாக அமுல்படுத்தப்படும் எனவும் கோபால்பிள்ளை தெரிவித்துள்ளதுடன் சேவை மற்றும் முதலீட்டிலேயே அதிகம் கவனம் செலுத்தப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் குறித்த உடன்படிக்கை தொடர்பாக 12 சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன.

இந்தியாவுடன் இவ்வாறான உடன்படிக்கையைச் செய்துகொள்ளும் இரண்டாவது நாடு இலங்கை என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே சிங்கப்பூருடன் இவ்வாறான உடன்படிக்கையில் இந்தியா கைச்சாத்திட்டுள்ளது. (சி)

# சார்க் செலவு வீண்போகாது; அதனால் நன்மைகள் ஏராளம்!

கொழும்பு, ஜூலை 12

இலங்கையில் இடம்பெறவுள்ள சார்க் மாநாட்டிற்கு 280 கோடி ரூபா செலவாகுமென உத்தேசிக்கப்பட்டுள்ளதாக பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

இதுதொடர்பான குறைநிரப்புப்பிரேரணை ஒன்று விரைவில் நாடாளுமன்றிற்குக் கொண்டு வரப்படும் என்றும் அவர் கூறினார்.

அவர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் வரிச்சட்ட மூலம் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து இது தொடர்பாக மேலும் கூறியனவை வருமாறு:-

சர்வதேச நாடுகள் இலங்கையை [illegible] செல்கின்றன என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. ஆனால், சர்வதேச தலைவர்கள் இலங்கையில் இடம்பெறும் சார்க் மாநாட்டில் கலந்துகொள்ள வரும்போது இந்த மாநாட்டை அக்கட்சிகள் எதிர்க்கின்றன.

இந்தச் சார்க் மாநாடு இலங்கையில் இடம்பெறுவதால் இலங்கைக்கு அதிக நன்மை உண்டு. இம்மாநாட்டுக்கு 280 கோடி ரூபா செலவாகும் என்று உத்தேசிக்கப்படுகின்றது. இதற்கான குறைநிரப்பு பிரேரணை விரைவில் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வரப்படும். இதற்காக அரச பணத்தை வீணடிப்பதாக பலரும் விமர்சிக்கின்றார்கள்.

இந்தப் பணம் வீணாகச் செலவிடப்படுவதில்லை. இச்செலவால் எமக்கு அதிக நன்மை உண்டு. இம்மாநாடு நடந்தாலும் நடக்காவிட்டாலும் இந்தப் பணம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் புனரமைப்புக்குச் செலவிடப்படும் என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருநெல்வேலி முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தேர்த்திருவிழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள். தேரில் ஏறுதவற்காக அம்பாள் வெளிவீதி வருவதையும் பக்தர்கள் புடைசூட தேரில் வீதி வலம் வருவதையும் படங்களில் காணலாம்
(படங்கள்: லக்ஸ்மன்)

# அன்னை தங்கம்மாவின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை கீரிமலையில்


யாழ்ப்பாணம், ஜூலை 12

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை கீரிமலை தீர்த்தக் கரையில் நடைபெறவுள்ளன.

மானிப்பாய் ப.விநாயகமூர்த்திக் குருக்கள் தலைமையில் காலை 8மணியளவில் ஆரம்பமாகும் அந்தியேட்டிக் கிரியைகளில் உறவினர்கள் மற்றும் அபிமானிகளின் விசேட பிரார்த்தனையும் இடம்பெறும்.

அம்மையாரின் சபிண்டீகரணக் கிரியைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழையில் அவரது பூர்வீக இல்லத்தில் காலை 9மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். விசேட ஆதம சாந்திப் பிரார்த்தனை மற்றும் கூட்டுப்பிரார்த்தனையும் அங்கு இடம்பெறும். (அ)

# தென்னாபிரிக்காவுடனான முதல் டெஸ்ட் பீற்றர்ஸன் சதம்; இங்கிலாந்து அபாரம்



லண்டன், ஜூலை 12

தென்னாபிரிக்காவுடான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது. பீற்றர்ஸன் சதம் அடித்துக் கலக்க முதல்நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 309 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பீற்றர்ஸன் ஆட்டமிழக்காமல் 104 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இங்கிலாந்து சென்றுள்ள தென்னாபிரிக்க அணி 4 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர்களில் பங்கேற்கிறது.

லண்டனில் உள்ள லோட்ஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் முதலாவது டெஸ்ட் போட்டி தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் கிரேம் சிமித் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

ஆரம்ப ஜோடிகளான அலஸ்ரியர் குக், அன்ட்ரூ ஸ்ரோரஸ் ஆகியோர் இங்கிலாந்துக்கு அசத்தலான தொடக்கத்தைப் பெற்றுக்கொடுத்தனர். அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அலஸ்ரியர் குக் டெஸ்ட் அரங்கில் 11ஆவது அரைச்சதம் கடந்தார். மறுமுனையில் தனது 50ஆவது டெஸ்டில் விளையாடிய ஸ்ரோரஸ் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தார். தென்னாபிரிக்கப் பந்துவீச்சை நிதானமாகச் சமாளித்த இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்காக 114 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஸ்ரோரஸ், மோர்கீலின் பந்துவீச்சில் பவிலியன் திரும்பினார். இவர் 44 ஓட்டங்களை எடுத்து, அரைச்சதம் கடக்கும் வாய்ப்பை 6 ஓட்டங்களால் நழுவ விட்டார்.

மூன்றாவது வீரராகக் களமிறங்கிய அணித் தலைவர் மைக்கல் வோகன் (2) வந்த வேகத்தில் டேல் ஸ்ரைனின் வேகத்தில் 'போல்ட்' ஆனார். அடுத்த ஓவரில் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த அலஸ்ரியர் குக் (60) ஆட்டமிழக்க, இங்கிலாந்துக்குச் சிறிய சரிவு ஏற்பட்டது.

பின்னர் ஜோடி சேர்ந்த பீற்றர்ஸன் மற்றும் இயன் பெல் அணியைத் தூக்கி நிறுத்தினர். இந்த ஜோடி சிறப்பாக ஆட இங்கிலாந்து கௌரவமான நிலையை இலகுவில் அடைந்தது. முதல் நாள் ஆட்டநேரம் முடியும் வரை இந்த ஜோடி பிரிக்கப்படாத நான்காம் விக்கெட்டில் தம்மிடையே 192 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கெவின் பீற்றர்ஸன் டெஸ்ட் அரங்கில் 13 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார்.

முதல்நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 3 விக்கெட் இழப்புக்கு 309 ஓட்டங்களை எடுத்திருந்தது. பீற்றர்ஸன் 104 ஓட்டங்களுடனும், இயன் பெல் 75 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெறவிருந்தது.

# தலைமைத்துவப் பயிற்சி

மானிப்பாய், ஜூலை 12

வேலணை பிரதேச செயலர் பிரிவில் இடம்பெறும் கிராமிய தலைவர்களுக்கான இறுதிநாள் பயிற்சிநெறி இன்று சனிக்கிழமை இடம்பெறும்.

பயிற்சிநெறியில் கலந்து கொண்டுள்ள கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் - செயலாளர், மாதர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட 30 பேருக்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். (1-95)

# ஒலிம்பிக் போட்டித் தொடக்க விழாவில் பிரான்ஸ் ஜனாதிபதி சர்கோஸி பங்கேற்பு

பீஜிங், ஜூலை 12

சீனாவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவில் பிரான்ஸ் ஜனாதிபதி நிகோலஸ் சர்கோஸி கலந்துகொள்கிறார்.

ஒலிம்பிக் போட்டிகள் சீனத் தலைநகர் பீஜிங்கில் அடுத்த மாதம் 8 ஆம் திகதி தொடங்குகின்றன. சீனாவில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்றும், திபெத் பிரச்சினை காரணமாகவும் ஒலிம்பிக் போட்டி தொடக்க விழாவை உலகத் தலைவர்கள் புறக்கணிக்க வேண்டும் என்று பல்வேறு அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன. எனினும் அமெரிக்க ஜனாதிபதி புஷ், ஆஸ்திரேலியா, ஜப்பான், நெதர்லாந்து ஜனாதிபதிகள் உட்பட சர்வதேசத் தலைவர்கள பலரும் தொடக்க விழாவில் கலந்துகொள்ளவுள்ளமையை உறுதி செய்துள்ளனர்.

# சம்பியன்ஸ் கிண்ண உத்தேச அணி கங்குலி, டிராவிட்டுக்கு இடமில்லை

மும்பை, ஜூலை 10

பாகிஸ்தானில் நடைபெற உள்ள சம்பியன்ஸ்கிண்ணத் (மினி உலகக் கிண்ணம்) தொடருக்கான இந்திய உத்தேச அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் கங்குலி, டிராவிட்டுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. சச்சின், யுவராஜ், இர்பான் பதான் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர்.

பாகிஸ்தானில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் நடக்கவுள்ளது. இதற்கான 30 வீரர்கள் அடங்கிய உத்தேச இந்திய அணியில் கங்குலி, டிராவிட் இடம்பெறவில்லை. இதற்கு வயது ஒரு காரணமாக கூறப்படுகிறது. கங்குலி, டிராவிட் இடம் பெறாத இளம் இந்திய அணி ருவென்ரி/20 உலகக் கிண்ணத் தொடர், ஆஸ்திரேலிய முத்தரப்புத் தொடர் என தொடர்ந்து வென்று அசத்தியது.

இந்தியாவில் நடந்த இரண்டு ஒருநாள் தொடர்கள், பங்களாதேஷ் முத்தரப்பு தொடர் மற்றும் ஆசியக் கிண்ணத் தொடர் என தொடர்ந்து ஒருநாள் அணியில் மும்மூர்த்திகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட வில்லை. இதைத் தொடர்ந்து சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலும் கல்தா கொடுக்கப்பட்டது. ஆனால், சச்சினுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

# மருத்துவபீட மாணவர்களின் பகிஷ்கரிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கடந்த 04.07.2008 இல் இருந்து சில கோரிக்கைகளை முன்வைத்து கற்கை நெறிகளை இடைநிறுத்தி இருந்த மருத்துபீட மாணவர்கள் தற்போது தமது வழமையான கற்கை நெறிகளுக்கு மீளத்திரும்பியுள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக மருத்துவ பீடத்தில் கல்விசார் பணி நிலைகளுக்கு குறிப்பாக விரிவுரையாளர்கள் பற்றாக்குறை காணப்படுவது வேதனைக்குரியதும், துரதிஷ்டவசமானதும் ஆகும். இருந்தபோதிலும் மருத்துவ பீடத்தின் பீடாதிபதி, பேராசிரியர்கள், நிரந்தர விரிவுரையாளர்கள் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய ஆசிரியத்துவ பங்களிப்பினால் மருத்துவ மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தங்குதடையின்றி முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

மருத்துவ பீடத்தின் பல துறைகளில் ஒரு சில விரிவுரையாளர்களே கடமையாற்றுகின்ற போதிலும் கூட அவர்களது தன் நலம் கருதாத சேவையினாலும், மேலதிக விரிவுரைகள் விடுமுறை காலப் பகுதியிலும் அவர்களது கடமை நேரத்துக்கு அப்பாற்பட்டும் நடத்தப்படுகின்ற காரணத்தினாலும் மாணவர்களுக்குரிய கல்விச் செயற்பாடுகள் மற்றும் பரீட்சைகள் குறிப்பிட்ட காலப் பகுதியில் நடத்தி முடிக்கப்படுகின்றன. மேலும் பல்கலைக் கழக விரிவுரை யாளர்கள் தங்களது ஏழாட்டு விடுமுறைகள் (Sabbatical leave) போன்றவற்றைக் கூட பெற்றுக்கொள்ளாது கடமையாற்று கின்றனர். அத்துடன் வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர்களினதும், ஏனைய மருத்துவர்களினதும் மேலதிகமான பங்களிப்பானது நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியதொன்றாகும்.

மருத்துவ கற்கைநெறியின் முதல் இரு வருடங்கள் பல்கலைக்கழக கற்பித்தலை மட்டும் உள்ளடக்கியுள்ளது. சில விரிவுரையாளர்களே கடமையாற்றுகின்ற போதிலும் வைத்திய நிபுணர்களின் பங்களிப்புடன் தமது மேலதிக வேலைப்பழுவை ஏற்று காலதாமதமின்றி இரண்டாம் மருத்துவமாணி பரீட்சைகள் உரிய காலத்தில் நடைபெறுவது குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். இவ்வருடமும் கூட இரண்டாம் மருத்துவமாணிப் பரீட்சைகள் குறிப்பிட்ட திகதியில் நடைபெறவிருந்தும் இரண்டாம் வருட மாணவர்கள் அதனைப் பிற்போடுவதற்கு கோரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

தமது வேலைகளின் மத்தியிலும் மருத்துவ நிபுணர்கள் கற்பித்தல் செயற்பாட்டில் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகம் கொடுத்து வரும் யாழ்.குடா நாட்டு மக்களின் உடல் நலத்தை பேணிக்காக்கும் பிரதான ஆதாரமாக யாழ்.போதனா வைத்தியசாலை திகழ்ந்து வருவது அனைவரும் அறிந்த விடயமே. அங்கு கடமையாற்றும் வைத்திய நிபுணர்கள் தமது நோயாளர் பராமரிப்பு தொடர்பான வேலைப்பளுவுக்கு மத்தியில் மாணவர்களிற்கு நோய் சிகிச்சை தொடர்பான கற்கை நெறிகள், பாடவிதான விரிவுரைகள், மேலதிக விரிவுரைகள், செய்முறைப் பயிற்சிகள் என்பவற்றை [illegible] பகுதியிலும் தமது கடமை நேரத்திற்கு அப்பாற்பட்டும் தன்னலம் கருதாது நடத்தி வருகிறார்கள்.

அவர்களதும் ஏனைய விரிவுரையாளர்களதும் முயற்சிகள் வாயிலாகவே யாழ். மருத்துவ பீடத்திலிருந்து குறிப்பிட்ட கற்கைக் காலத்திற்குள் மருத்துவ பீட மாணவர்கள் பயிற்சிகளை முடித்து வெளியேற முடிந்தமை மட்டுமல்லாமல் இறுதி ஆண்டு தேர்வுகளில் நாட்டின் பிற மருத்துவ பீடங்களிற்கு சிறிதும் சளைக்காத- தரமான- அதாவது நாட்டின் ஏனைய மருத்தவ பீடங்களை விட உயர்ந்ததும் கொழும்பு மருத்துவ பீடத்திற்கு ஈடாகவும் மருத்துவர்களை யாழ் .மருத்துவ பீடத்தினால் உருவாக்க முடிகின்றது. கடந்த வருடங்களின் (Merit list) இதற்கு சான்று பகர்கின்றது.

**மருத்துவ பட்டதாரிகளின் முடிவு**

இந்நிலையில் எமது மருத்துவ பட்டதாரிகள் தமது மருத்துவ பணியை யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொண்டு, ஆசிரியர்களின் மேலதிகமான வேலைப்பளுவில் பங்கெடுப்பதன் மூலமே வைத்திய நிபுணர்களும் தங்களது மேலதிக நேரங்களில் தமது கற்பித்தல் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஆர்வத்துடனும் களைப்பின்றியும் ஈடுபடமுடியும் என்பது கண்கூடு.

இந்நிலைமையினை தெளிவாக உணர்ந்து கொண்டு, தற்போது இறுதியாண்டில் கல்விகற்கும் மருத்துவ மாணவர்களில் அண்ணளவாக 40பேர் தமது சுயவிருப்பின் பேரில் தமது உள்ளகப் பயிற்சி நெறியை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆற்றுவதென்று ஆக்க பூர்வமான முடிவை எடுத்துள்ளார்கள். இதனைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள சுமூக நிலையின் நிமித்தம் மருத்துவ மாணவர்கள் தமது அனைத்து கல்விச் செயற்பாடுகளிலும் மறுபடியும் வழமைபோல் ஈடுபட ஆரம்பித்திருக்கிறார்கள்.

இச் செயற்பாட்டின் அவசியத்தை உணர்ந்து கொண்டு தொடர்ந்து வரும் காலங்களில் பீடத்தின் பிற அணி மாணவர் களும் பல்கலைக் கழகத்துடனும் வைத்தியசாலையுடனும் இணைந்து சேவையாற்றுவார்கள் என திடசங்கற்பம் பூண்டுள்ளனர். - என்று உள்ளது. (அ)

# வெளிவாரி மருந்தாளர் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

இலங்கை மருத்துவக் கல்லூரிக் கழகத்தினால் இன்று நடத்தப்படவிருந்த வெளிவாரி மருந்தாளர்களுக்கான பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது என யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து பரீட்சை வினாத்தாள் எடுத்துவரப்படாமையாலேயே பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது எனவும்-

பரீட்சை நடைபெறும் திகதி குறிதது பின்னர் அறிவிக்கப்படும் என்றும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (1-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயக விடுதலையைப் பலப்படுத்த பொங்கு தமிழாக எழுச்சிபெற்றுள்ள உறவுகளுக்குப் பிரபாகரன் வாழ்த்து

கொழும்பு, ஜூலை 12

புலம்பெயர் தமிழ் மக்கள் தாயக விடுதலையைப் பலப்படுத்துவதற்காக பெரும் எழுச்சி கொண்டு நிகழ்த்தி வருகின்ற பொங்கு தமிழ் நிகழ்வுகளுக்கு தமிழீழ விடு தலைப் புலிகளின் தலைவர் வே.பிரபா கரன் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

புலம் பெயர் தமிழ் மக்களின் பொங்கு தமிழ் எழுச்சி குறித்து கருத்துத் தெரிவிக் கும் போது தலைவரின் வாழ்த்துக்களை குறிப்பிட்ட தமிழீழ விடுதலைப் புலிக ளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகளை இலங்கை அரசு தீவிரப்படுத்தி வருகின்ற அதேவேளை பெரும் பொய்களை உலகளவில் பரப்புரை செய்து வருகின்றது.

தமிழ் மக்களைக் கொன்றொழித்துக் கொண்டு உலகையும் ஏமாற்றி வருகின்ற இலங்கை அரசு, தமிழ் மக்களின் விடு தலைப் போராட்டத்தை பயங்கரவாதமாக உலகளவில் சித்திரித்து வருகின்றது.

அரசின் இந்தப் பொய்ப் பரப்புரையை தகர்த்து எறிந்து உலகம் முழுமைக்கும் தமிழ் மக்கள் பொங்கு தமிழாக தமது அரசியல் அபிலாசைகளை பேரெழுச்சியுடன் தெரி வித்து வருகின்றனர். இது விடுதலைப் போராட்டத்தை வலுப்படுத்தி வருகின்ற அதேவேளை, களத்தில் போராடும் போராளிகளுக்கும் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்கும் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உலக நாடுகளுக்கு அவர்களின் விருப்ப மொழியில் தமிழ் மக்கள் தாயக விடுதலையின் நியாயத்தையும், தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைகளுக்கு தமிழ் மக்கள் உரித்துடையவர்கள் என்பு தையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

உரிமைக்காகவே தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பதை அவர்கள் வலுவாக எடுத்துரைக்கின்றனர். அதிலும் கனடா வில் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் ஒரு லட்சம் தமிழ் மக்கள் திரண்டு எழுந்தி ருப்பதும் நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, பெல்ஜியம், நோர்வே, சுவீடன், டென்மார்க், தென்னாபிரிக்கா உள்ளிட்ட நாடுகளில் இதுவரை பொங்கு தமிழாக எங்களின் புலம்பெயர் உறவுகள் தாயகத்தின் போராட்டத்தை வலுப்படுத்துவதில் பேரெழுச்சியைக் காட்டியுள்ளனர். அடுத்து லண்டனில் பொங்கு தமிழ் நடைபெறவுள்ளது. தாயகத் தாகத்துடன் புலம்பெயர்ந்த தளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் இந்த எழுச்சிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள அதேவேளை, பெருமிதமும் கொண்டுள்ளார் எனவும் குறிப்பிட்ட நடேசன், விடுதலைப் போராட்டத் துக்கு வலுச்சேர்க்கும் இத்தகைய செயற்பாடுகள் தொடரவேண்டும் எனவும் கூறினார். (சி)

## கிழக்குப் பல்கலை துணைவேந்தர் பத்மநாதன்

கொழும்பு, ஜூலை 12

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் புதிய துணை வேந்தராக கலாநிதி பத்மநாதன் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அப்போதைய துணைவேந்தர் ரவீந்திரநாத் கொழும்பில் காணாமல் போனமையை யடுத்து, இந்தப் பதவிக்கான வெற்றிடம் ஏற்பட்டிருந்தது.

2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் பதில் துணை வேந்தராக பணியாற்றி வந்த கலாநிதி பத்மநாதன் இப்போது துணைவேந்தராகப் பொறுப்பேற்றுள்ளார்.

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளரான47 வயதுடைய பெருமாள் வசந்தன் என்பவரே இவ்வாறு சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முகத்துவாரப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-சி)

## இந்தியப் படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காக இலங்கை வரும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் பாதுகாப்புக்காக இந்தியப் படையினர் 1,500 பேர் வருகை தந்துள்ளனர் என்று வெளியாகியிருக்கும் செய்தியை நான் முற்றாக மறுக்கிறேன்.

அப்படி யாரும் வரவுமில்லை, வருவதற்கான ஏற்பாடுகளும் இல்லை.

அரச தலைவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது அவர்கள் சிறு எண்ணிக்கையிலான பாதுகாவலர்களைத் தம்முடன் அழைத்துச் செல்வது வழமை.

அதேபோல்தான் மன்மோகன் சிங்கும் சிலரை அழைத்து வருவார். ஆனால், 1,500 பேரின் வருகை என்பது முற்றிலும் பொய்.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சரிடம் இது தொடர்பாக வினவியபின்பே இந்தப் பதிலை நான் இங்கு தருகிறேன் - என்றார்.

## மட்டக்களப்பில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வகுமார் என்பவரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவர் ஆவார்.

சம்பவதினம் திராய்மடு கிராமத்தில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்ற சமயமே இவர் கடத்தப்பட்டார் என்று இவரின் குடும்பத்தவர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணை களை மட்டக்களப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கதிர்காமம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகத் துப்பாக்கியால் சுட்டுவிட்டுச் சென்றிருக்கிறது.

காயமடைந்த அனைவரும் கதிர்காமம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் 19 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவர்கள், அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் நடந்த இடத்துக்குச் சமீபமாக இராணுவத்தினரின் சோதனைச் சாவடி ஒன்று அமைந்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (அ-சி)

## திருமலையிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று வழிபாடு இயற்றினார்.

பத்துப்பேர் கொண்ட குழுவுடன் சென்ற அவர் திருமலை வேங்கடேசன் ஆலயத்தைச் சென்றடைந்த வேளை ஆலய நிர்வாகிகள் அவரை வரவேற்று அழைத்துச் சென்றனர்.

நேற்றிரவு அங்கு தங்கி நின்று வழிபாட்டில் ஈடுபட்ட அவர் இன்று திருப்பதிக்குச் செல்கிறார். (அ-1)

## நளினியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழித்துவிட்டேன். என்னை நன்னடத்தை அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்று நளினி தமது மனுவில் அவர் கோரியிருந்தார்.

நளினியை விடுதலை செய்யக்கூடாது என்று கோரியும் இந்த வழக்கில் தன்னையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கோரியும் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி எதிர்மனுத் தாக்கல் செய்திருந்தார்.

சுப்பிரமணிய சுவாமியின் மனுவுக்கு பதில் அளிக்குமாறு கோரி தமிழக அரசுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

அந்த மனுநேற்று நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது தமிழக அரசு சார்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

தமிழக அரசின் சார்பில் தலைமை சட்டத்தரணி மாசிலாமணி நீதிமன்றில் ஆஜரானார்.

மத்திய, மாநில அரசுகள் நளினியை விடுதலை செய்யக் கூடும் என சுப்பிரமணிய சுவாமி கூறுவது சரியானது அல்ல-

நளினியை விடுதலை செய்யக்கூடாது என்பதுதான் தமிழக அரசின் நிலைப்பாடும் கூட, இந்த வழக்கின் பிரதான மனு மீதான விசாரணைக்கு வரும்போது தமிழக அரசு இந்தக் கருத்தைத்தான் வலியுறுத்தும்-

எனவே, சுப்பிரமணிய சுவாமியின் மனு தேவையற்றது- இவ்வாறு நீதிமன்றில் சட்டத்தரணி மாசிலாமணி தெரிவித்தார். அதனை அடுத்து சப்பிரமணியசுவாமி மனு மீதான தீர்ப்பை நீதிபதி ஒத்திவைத்தார். (அ)

## இலங்கை தன்னை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேர்காணலின் விவரம் வருமாறு:-

**கேள்வி:-** ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா அண்மையில் வேலூர் சிறைக்குச் சென்று நளினியைச் சந்தித்தார். விடுதலைப் புலிகள் இந்தச் சந்திப்புக் குறித்து என்ன கருதுகிறார்கள்?

**பதில்:-** இது முற்றுமுழுதாக ஒரு மனிதாபிமான சமிக்ஞை. வேறு எதுவுமல்ல!

**கே:-** நளினியின் விடுதலை குறித்து பெருமளவு விவாதங்கள் இடம்பெறுகின்றன. இந்திய அரசோ அல்லது நீதிமன்றமோ நளினியை விடுதலை செய்யும் பட்சத்தில் இந்தியா ராஜீவ் காந்தியின் கொலைக்கு அப்பால் சென்று புதிய உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளத் தயார் என்பதற்கான அறிகுறியாக அதனைப் புலிகள் கருதுவார்களா?

**ப:-** இந்திய அரசு தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாசைகளையும் அவர்களது சுதந்திரப் போராட்டத்தையும் அங்கீகரிக்கும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

**கே:-** நளினி விடுதலை செய்யப் படும் பட்சத்தில் அது தீவிர மாற்றத்திற்கு வழி வகுக்கும் எனத் தெரிவிக்கிறீர்களா?

**ப:-** ஆம். நான் அவ்வாறே கருதுகிறேன்.

**கே:-** இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவின் சமீபத்திய விஜயத்தின் போது, இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சிகளை வழங்குவது உட்பட இராணுவ ரீதியிலான இணக்கப்பாட்டிற்கு இரு நாடுகளும் வந்துள்ளன என்று தெரிகின்றது. விடுதலைப் புலிகள் இதனை எவ்வாறு பார்க்கின்றனர்?

**ப:-** நாங்கள் வடக்கு - கிழக்குத் தமிழர்களின் நியாயபூர்வமான உரிமைகளுக்காகப் போராடி வருகின்றோம்.

இலங்கையின் அரசுகள், பிராந்தியத்தில் இந்தியாவின் நலனிற்கு எதிராகவே எப்போதும் செயற்பட்டு வந்துள்ளன. இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன.

மீண்டுமொருமுறை மஹிந்த அரசு இந்தியாவை ஏமாற்ற முனைகின்றது. தனது சகாவை இந்தியா தவறாகத் தெரிவு செய்துள்ளதாக நாங்கள் கருதுகிறோம். இந்தியா இந்தத் தவறை சரிசெய்யும் என்றும் எதிர்பார்க்கிறோம். (அ-சி)

## கல்முனைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டதிற்கு இடமாற்றம்செய்யப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதனால் விரக்தி அடைந்த அவர் நேற்றுக்காலை தொலைபேசியில் தனது இரு பிள்ளைகளுடனும் நீண்ட நேரம் கதைத்தார் எனவும்- அதன் பின்னரே தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்ததாகவும் - கூறப்பட்டது.

வர்த்தகர்களின் மரணம் தொடர்பாக அவர் தனது நாள் குறிப்பில் விவரமாக எழுதியிருந்தார் - சம்பவத்துக்கு காரணமானவர்கள் குறித்த தமது சந்தேகத்தைத் தெரிவித்து தொடர்ந்து விசாரணை செய்ய வேண்டும் என்று அதில் குறிப்பிட்டிருந்தார் என்றும் - கூறப்படுகிறது

அந்த டயறி 'சீல்' செய்யப்பட்டு மேலதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் இன்னும் சில மாதங்களில் பணியில் இருந்து ஓய்வு பெறஇருந்தார். (அ-1)


**கற்சுமி வெளியீடு**

* தரம் 5புலமைப்பரிசில் பரீட்சைக்கு வழிப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட
கணிதம் + நுண்ணறிவு
வினாக்களின் தொகுப்பு விற்பனையாகிறது விடைகளுடன்.
* பகுதி I 225 இற்கு மேற்பட்ட வினாக்கள்.
* பகுதி II 140 இற்கு மேற்பட்ட வினாக்கள்.
உங்கள் பிள்ளைகளின் கணித அறிவை மேம்படுத்தும்.
(புத்தகசாலைகளில் கிடைக்கும்)
கற்சுமி, 166, நாவலர் வீதி, யாழ்.

**கணனி தட்டெழுத்தாளர் தேவை**

யாழ்.நகரை அண்மித்து உள்ள நிறுவனத்திற்கு கணனி தட்டெழுத்து செய்யக்கூடிய ஒருவரும் பழக விரும்பும் ஒருவரும் (பயிலுநர்) தேவை, தொடர்புக்கு தொலைபேசி எண் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல. 3114
மே/பா உதயன்.

**காணி விற்பனைக்கு**

யாழ்நகருக்கு அண்மையில் ஸ்ரீ வேங்கடேசன் வீதியில் பெருமாள்கோயிலுக்கு அண்மையில் கொனிக்கா கலர்லாப் முன்பாக நான்கு பக்கமும் சுற்றுமதிலுடன் அண்மையில் பொழிந்த கல்லால் கட்டிய நன்னீர் கிணற்றுடன் ஒரு பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
* நல்ல சூழலில் வீடு, வியாபார ஸ்தாபனம், மண்டபங்கள் அமைக்கக் கூடிய காணி.
மேலதிக விபரங்களுக்கு
இல.219A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:0776258796

**ALFAA NET CAFE**

| | |
|---|---|
| Browsing hour | 120/= |
| வீடியோவில் கதைத்தல் | 300/= |
| Scanning | 10/= |
| Net2Phone Calls | 6/= |

192/1.Navalar Road, Jaffna.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

Diploma Courses... **INDIVIDUAL Classes
**Dip in Computerized Accounting (Manual Accounting, Tally, Accpack, MYOB, QuickPro)
*Diploma in Web Developing (Flash, PHP, MySQL, Dreamweaver, Photoshop.......)
* Diploma in Computer Aided Designing
** Diploma in Desktop Publishing. (Photoshop, CorelDRAW, Pagemaker, Typing)
பதிவுகள் 17.07.2008 முன் நேரில்
International Courses...
MCP, MCTS, MCSE, MCSA, CCNA, N+, A+
Sun Certified Java Programmer, CIW,
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

**BRIGHTMAN**
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்
A/L 2010
பௌதிகவியல்
எமது வரவையான ஆசிரியர்
12.07.2008 Sat. 5 p.m.
(Sat.,Sun.- 5p.m.)

**பொருளியல் கருத்தரங்கு**
P.S.Kumar
B.BA.(HONS)
யாழ். பொருளியல் கல்லூரி
14.07.08 Mon. 8.30 a.m.
S.வரதராஜன் ஆசிரியரிடம் இருந்து நேரடியாக தருவிக்கப்பட்ட கருத்தரங்கு குறிப்புகளை உள்ளடக்கிய பாடக் குறிப்புகள் வழங்கப்படும்.

**அறிவித்தல்**

எமது தொழிற்சாலை தவிர்க்க முடியாத காரணங்களால் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கும் விநியோகத்தர்களுக்கும் அறியத்தருகிறோம்.
ஐங்கரன் குறூப்,
56/5, ஏகாம்பரம் வீதி, பீசாலை.

**CB Computer Academy**
புதிய பிரிவுகள்!!!
13.07.2008(Sun)
14.07.2008(Mon)

| | |
|---|---|
| Diploma in Accounting Packages | Dip. in DTP & Graphics Design |
| Diploma in Hardware and Networking | Dip. in Programming Languages |
| Diploma in ICT (Grade 10 & 11) | Diploma in Web Designing |
| Diploma in GIT (G.C.E A/L) | Internet & E-Mail |
| Diploma in Ms Office | Children Programme |

**UNIT**
Jaffna | Nelliady
Now Available

UNISTA
Intel 945Gc Mother board, Intel 1.8Ghz processor, 512Mb DDR2, 80Gb Hdd, Combo, 15" Crt, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS

UNIPRO
Asus Intel 945Gc Mother board, Intel Dual Core 2.0Ghz 512Mb DDR2, 80Gb Hdd, Combo, 15" Crt, Keyboard, Mouse, speaker, ATX Casing with SMPS & UPS

UNIDLX
Intel Classic Main Board, Core 2 Duo 2.2Ghz, 1Gb DDR2, 160Gb Hdd, DVD-RW, 17" Crt, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS & UPS

UNISPL
Intel Classic Board, Core 2 Duo 2.6Ghz Extreme, 2Gb DDR2 250Gb Hdd, DVD-RW, 17" LCD, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS & UPS

Tables, Chairs & UPS

Printer & Scanners
Hp D1460, HP P1005 Laserjet
Canon Lide 25, HP G2410
HP All in One (3 in One)
HP All in One (4 in One)

Others
Keyboards, Mouse Optical
Speaker
Woofers Creative & MicroLab

Monitors
15", 17 Samsung / Viewsonic Semi / Flat CRT,
17" Samsung LCD Wide
19" Samsung LCD Wide
128Mb AGPVGA
256Mb PCI EXPRESS VGA

We Are Not Big But The Best
மனோகரா சந்தி, 347, K.K.S Road, Jaffna, ✆ 4590720, 2228844
MMV Road, Bus Stand, Nelliady, Karaveddy ✆ 2264871


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org